தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

16 FEB 1932

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ஹூ ஜனவரி மீ 28உ [No. 4

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 61
2. தமிழிப்பாடம்
நளவெண்பா — சுயம்வர காண்டம் 63
3. குன்றுடையானும் மக்களும்
W. V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 66
4. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 1. களம் 2.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 69
5. பெண்பாலார்—(ஷாபன்ஹார் கட்டுரை மொழிபெயர்ப்பு) - K. இராஜகோபாலன் 73
6. அப்பர் (64 கலை—தர்க்கம்)
E. N தணிகாசல முதலியார் B.A. B.L. 75
7. கம்பராமாயணம் (சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 77
8. வர்த்தமானம். 79

சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பிவைப்பதே நலம். அப்படிச்செய்யாத நண்பர்களுக்கு வி. பி. அனுப்பிவருகின்றோம். வி. பி. தம் கைக்கு எட்டியவுடன் அதனைப் பெற்றுக்கொள்ளத் தவறுவாராயின் எமக்கு மிகுந்த நஷ்டமாகும்.

தபால்கட்டணம் உயர்ந்திருப்பதால் மலேயே தென்னாப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு இவ்வாண்டிலிருந்து சந்தா ரூ. 9-8-0 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அவ்விடங்களுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லையாதலின் அங்கிருக்கும் நண்பர்கள் விரைவில் தம் சந்தாத் தொகையை அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

மானேஜர்.

188982

கலாநிலயம்

இறுமாந் திருப்பன் கொலோ? 3.

நாம் இருக்கின்றோ மென்பதெல்லாம் என்னதா னென்ற நிச்சய மில்லாதிருக்க, இருக்கத்தான் வேண்டும் என்னுமொரு இச்சையோ இடைவிடாது ஊடாடி அவ் விருக்கைக்கு நிரந்தரம் சான்றாகின்ற உண்மையை உணர்த்தலுற்றோம். இவ்வுணர்வினால் உற்றடையும் பண்பும் பயனும் எவையென இனிக் கருதுதற்குச் சிறிதியலும்.

நம்மோடு நம்முடைய வாழ்க்கையின் எந் நிகழ்ச்சியைப்பற்றியும் "அது இருக்கின்றது" என ஒருநிமிடத்தளவேதான் உரைக்கலாம். அதன்பின்னர் உளவாகிய அளப்பரியபெருங் காலமெல்லாம், "அது இருந்தது" என இறந்தகாலத்தால் குறிப்பதற்கேஏற்றதாகின்றது. மாலைதோறும் நாம் நாளொன்றிழந்த ஏழைகளாகின்றோம். இவ்வண்ணம், நம்முடைய ஒருசாண் ஆயுள் கனவினுங் கடிய வேகமுடன் மாய்வதைக் காணக் காணச் சித்தம்பிதிர்ந்த பித்தர்களாயன்றோ நம்மில் ஒவ்வொருவரும் முடிதல்வேண்டும். 'இருக்கின்றேன்' என்பதனின்முன்னே இல்லாமற்போகின்ற இப் புல்லிய வாழ்க்கை வாழ்ந்தென், வாழாதொழிந்தாலென் என்ற வெறுப்பு எவ்வெவர் உள்ளத்தையும், கண்ணிற் புகுந்த மணல்போல், உறுத்திக்கொண்டிருத்தலே கடன். "பிரபஞ்சமே அநித்திய மென்பர்—ஆகுக! அவ் வநித்தியத்திலும் எனக்கிட்ட கூறு இத்துணை அற்பமாகவா அமைதல் வேண்டும். அவ் வநித்தியத்தினேனும் அகப்பைநிறைய மொண்டளித்தாலாகாதோ! ஆண்டுகள் ஓர் ஆயிரம் என்னுடையதாயின் அதனால் யார்க்கேனும் ஏதேனுங் குறையுண்டோ! இல்லாத காலமே, நீயேன் இப்படி உலோவுகின்றாய்!" என்ற சீற்றத்தால் செய்கை சிதைந்து உள்ளம் உடைந்து ஓலமிட்டவண்ணமாயன்றோ எல்லாரும் எப்பொழுதும் அழிதல் வேண்டும்.

மற்று, அப்படியோ மனிதர் அழிகின்றா ரல்லரே! சின்னாள் பல்பிணிச் சிற்றுயிரென்ற பான்மையால் யாரே சும்மாவிருக்கின்றார். ஆடுவார் பாடுவார் ஓடுவார் பகைப்பார் நகைப்பார் ஈட்டுவார், துன்புறுவார், இன்பமும் இனிவரும் என்னும் நம்பிக்கையால் அத்துன்பத்

தைத் தாங்குவார், தோல்வியை அஞ்சுவார் வெற்றியை விளம்புவார், அழுக்காறடைவார், இறுமாந்திருப்பார், பிணங்கண் டழுவார் மணங்கொண் டுவப்பார்,--இப்படியே விவகரிக்கின்ற எண்ணில் பல்கோடி விடயங்களில் குறைவொன்றும் காண்கின்றோம் அல்லோம். ஏனிது! எதனுல் நாம், ஒருபோதும் இலதாகும் இவ்வாழ்க்கையை என்றென்றும் இருப்பதுபோல் தாங்குகின்றோம். ஒருவன் மற்றொருவனை நிந்தித்தானென்றும் வஞ்சித்தானென்றும் எத்துணை கோபம் பொங்கிவிடுகின்றது? தனக்குத் தீங்கிழைத்தானென்று மற்றவனோடு மாறுபட்டுச் சீறுவார் எத்தனைபேர்! உற்று நோக்குங்கால் மலையினும் பெரியதிம் மதியீனம். கால தத்துவத்தைப்பற்றி இதன்முன் இங்குரைத்தவைகள் நினைவில் நீங்காதிருக்குமாயின், ஒவ்வொரு காரியமும் அவ்வக்காரியத்தின் கர்த்தாவும், அவ்வந் நிமிடங் கடந்தபின், முன்னைய நிமிடத்தின் பொய்களாய் முடிவது தெரியக்கூடும். எனின், சாத்தன் தன்னை நிந்தித்தான் எனக் கொற்றன் வெகுளுமுன், நிந்தித்த சாத்தனும் இல்லாமற்போய் வேறாகி விடுகின்றான், நிந்திக்கப்பட்ட கொற்றனும் இல்லாமற்போய் வேறாகிவிடுகின்றான்; பின் யாரை யார்நிந்தித்தானென்றுயார்யாருடன்சண்டையிடச்செல்வதோ அறிகிலோம். ஊர்ச்சண்டையை விலைக்குவாங்குவதென்னும் வழக்கின் உண்மைப்பொருள் இது.குழிப்பிள்ளையை எடுத்துவைத்து இழவு கொண்டாடுவதென்பதும் இதுவே. உவப்பதன்பொருளும் இவ்விதமே அவமாய் விடுகின்றது. ஆயினும் நாம் நமக்குற்ற தீமையைக் காய்கின்றோம்; நன்மையைஉவக்கின்றோம்.ஏனெனில் மாய்ந்தேகும் இத்தோற்றங்களுக்கு அப்பால் மாயாதவோர் நித்தியமான நிலையே நம்முரிமை என்பதை நம்முடைய உள்ளுணர்வு தன் ஆழத்தில் ஊகித்தறிந்திருக்கின்றது. நம்முடைய தோற்றம்மாத்திரம் இவ்வநித்தியமென்னும் திரையில் மறைய, நாமோ, என்றும் வற்றாத நித்தியமென்னும் ஊற்றினில் ஒரு கூறு உடையவர்களாய், பிறவித்தோற்றம் போயபின்னரும் நம்முடைய ஆன்மாவை அந் நித்திய நிலையினில் நிரந்தரம் மீண்டும் காணவல்லோம் என்னும் நம்பிக்கையே வெளிப்படலின்றித் தொக்குநின்று நம்மை எச்செயலினும்இயக்கிவைக்கின்றது. ஆயினும், மனிதர் காலத்தின்கொடுமையால் சென்றவைகளுக் கழுங்கியும் நாளைச் சேர்பவைகளுக்கு வெருவியும் குலைந்துருகும்படி தற்கால வாழ்க்கைமுறை அமைந்திருத்தலால், அந்நித்தியநிலையின் நினைவானது தலையெடுக்க வொட்டாமற் கழுத்தைப்பிடித் தழுத்திவிடுகின்றார். ஆதலின் அதன் குரலும் கையும் ஓய்ந்துவிடுகின்றன. இவ்வாறு நித்திய நிலையின் நம்பிக்கை ஒடுங்கியொடுங்கி இருக்குமிடந் தெரியாமல் ஓய்ந்துவிட்டதெனின் எஞ்சிய நோக்கமும் அது இயங்கும் விதங்களும் விபரிதங்களேயாகி முடிகின்றன.

இங்கு இதன்முன் உரைத்துளவனைய கருத்துக்கள் மனிதர்களது வாழ்க்கையை வஞ்சித்துக்கொள்கின்ற வகையுஞ் சிறிதுளது. இன்றைக் கிருப்பதொன்றே மெய்யென்றும் மற்றவெல்லாம் மனத்தின்விளையாட்டு மாயங்களே யென்றும் கருதநேர்கின்றவர், நிகழ்காலத்திலிருந்து தாம்கவர்ந்து துய்க்கக்கூடிய அனைத்தையும் கைப்பற்றித் துய்ப்பதே வாழ்க்கையின் நோக்கமென்று கொள்வ[illegible] பேரறிவு என்[illegible]ண்ணத் தலைப்பட்டு [illegible]த்திறத்துத் தக்கபடி [illegible]வகரிப்பவராகின்றார். உலோகாயதர்க்குரிய வாழ்க்கையினூக்கம் இன்னதே. பேரறிவு இது வென்னும் பான்மையே மாறுட வாழ்க்கை அமைதியிழந்து விரைந்தலைவதற்குக் காரணமாகின்றது. இந்தச் சாணுயுளிற்குள்—அதுவும் எந் நிமிடத்தில் எதிர்பாராமல் எப்படி மாய்ந்திடுமோ என்னும் பயமும்இருந்துழங்க-ஒவ்வொருவனும் தன் பலவகை அவாக்களும் நிறைவடையும்படி துய்த்துவிடவேண்டுமென்று விரைகின்றனன். தீவினை விட்டு ஈட்டித் துய்க்க இயலுமெனின் துய்ப்போம்; குறிப்பற்ற இச்சிறு ஆயுளிற்குள் அது இயலாதெனின் நன்றியிற் செல்வத்தைக் கொண்டேனுந் துய்த்துத் தீர்வதே தக்கது, என்னுங் கொள்கையை ஏற்றபெற்றி எய்தினவனுகின்றான். 'ஆரத்துய்த்து நாம் அநமகிழாது ஒழிவோமோ'' என்னும்இவ்வச்சமே கீழ்மகளது ஆசாரம். பறந்தவண்ணமாயிருக்கும் நிகழ்காலத்தையே நினைத்து விவகரிப்பதால் அவர்தம் வாழ்க்கையும் பறந்தவண்ணமா யிருக்கின்றது. "இதனையுஞ் செய்து அதனையுஞ் செய்து, கடைசியில் 'அப்பாடா' என்று ஓய்ந்திருப்பதற்குத்தான் இத்தனை பாடுபடுகின்றேன்" என்று, இறுதியில் ஓர் அமைதியில் நாட்டம் வைப்பதுபோல் தோன்றினும், அவர் கொள்கையின்படிஒருபோதும் அடையமாட்டாத அவ்வமைதியை நாடுவதென்னும் பேரால் ஓட்டமும் பிடியுமாகவே ஓயாது அலைவதிற்றான் வாழ்நாள் அத்தனையுந் தீர்கின்றது. இடைவிடாது அசையவேண்டுவதே கடனுய இவ்வற்பவாழ்க்கையின் பரிபவத்தை என்னென்றுரைப்பபோம்! செங்குத்தான மலையினின்று இறங்குபவன் ஒருவன், கால்வைத்து ஓரிடத்தும் நிற்க இயலாமல் ஓடியவண்ணமாகவே இருத்தல்வேண்டும்; நிற்பானேல் விழுந்து உருண்டுவிடுவான். கயிற்றின்மேலொருவன் அசைந்தும் நடந்தும் சென்றிருந்தாலன்றி விழுந்துதானே தீரவேண்டும். இருசக்கர வண்டியின் மீதும் (Bicycle) ஓடினுலன்றி இருக்க இயலாமை வெளிப்படை. இப்படியே மனிதவாழ்க்கை எல்லா வகைகளிலும் அமைகின்றது—நிமிர்ந்திருக்கவேண்டுமாயின் நிலைத்தலின்றி ஓடலேவேண்டும். இவ்வாறெல்லாம் அலைந்துதிரிந்து அடையும் பயன் என்னவென்றியம்பவேண்டுமோ! மனிதன் ஒருபோதும் இன்புற்றிருப்பதில்லை; இன்புறச்செய்யுமென்று எதனையோ பின்பற்றித் தொடர்வதிலேயே வாழ்நாள் முழுவதையும் அழித்துமுடிகின்றான். வாழ்க்கையென்னுங் கடலில் செலுத்திய அவன் நம்பிக்கைஎன்னும் நாவாய் இன்பமென்னுங் கரையை எய்துதலின்றியே, அவாவியதொன்றும் அகப்படாதொழிவதால் வீங்கியெழும் பெருமூச்சுக்காற்றி லடிபட்டு முறிந்த கூம்புடனும் கிழிந்த பாயுடனும் முழுகிவிடுகின்றது. இதனை எல்லோருங் கண்டிருந்தும் பண்டைவண்ணமே புக்குழலும் பேதைமை பெரியதோ சிறியதோ பேசல் மிகை.

இருக்கும் நாள் சிலவேயாதலின் அதற்குள் தேடவேண்டிய இரைகளையெல்லாம் யாக்கைக்குத்தேடிக் கொள்வதே பேரறிவு ஆகும் என்னுங் கொள்கையின் முடிவு இதுவேயாகி யாருக்கும் மலையிலக்காய் நிற்கின்றது இன்னணம் பயனுல் மாத்திரமன்றி நோக்கத்தாலும் ஊக்கத்தாலுங் கூட அக்கொள்கையினும் பெரியதோர் மதியீனம் வேறு இல்லையென்பதும் சிறிதே அறிவுடையோர்க்கும் எளிதில் புலப்படவேண்டுமே. அடுத்தநிமிடம் இல்லாததாகக் கனவிற்கண்ட கானல் நீர்போல் மாய்கின்ற நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியே

இவ்வாழ்க்கை என்பது கருத்தாயின், மற்று அதனில் பெறுவதென்றும் இழப்பதென்றும், துய்ப்பதென்றும் இவைகளின்பொருட்டு மிகமிக விரைவதென்றும் முயல்வதெல்லாம் எற்றுக்கு! இல்லாததொன்றிற்காகவோ இருந்தேங்கி நெஞ்சம் புண்ணுகவேண்டும். மனிதன் இருந்தேங்கி நெடுந்தூரம் தான் நினைந்து நெஞ்சம் புண்ணுவதெல்லாம் இன்றியமையாதனவாகிய உண்கின்ற நாழிக்கும் உடுக்கின்ற நான்கு முழத்திற்குமன்று. தன்னுடைய உரிமைக்கும் பெருமைக்கும் இன்பத்திற்கும் ஏற்றவை இவைஇவையென்று பொல்லாத தன் மதியின்மையால் கற்பித்துக்கொண்டவப் பொய்யினும் நொய்ய படிவங்களுக் கங்காந்து பொங்கும் ஆரவாரங்களையல்லவோ எங்கெங்கும் செவிடுபடக் கேட்கின்றோம். கடலினும் பெரியதே இக் கண்ணிலா மட்மை. மற்றவைகளொன்றிற்கும் நச்சுதல் இன்றியே, "நான் இருக்கின்றேன்'' என்னும் அவ்வொரு இச்சையே நிச்சயமாகும்படி நிகழ்த்தி வைத்தால், அதனிலும் இன்பம் வேறொன்று வேண்டுமோ! மானுடப் பெருமைக்கு அதனிலும் உரிமை அயலொன்றுவேண்டுமோ! ஆதலின்உரிமையென்றும் பெருமையென்றும் வேடங்கள் பூண்டு இன்பமெனுங் கூத்தாடி நாளும் ஒருநாள் இறுமாந்திருப்பன்கொலோ என்று ஏங்குவானேன்! உடைமையும்உதவியும்இன்றியே,நீ இருக்கின்றாய்,என்ற அந்நிச்சய இச்சையேஇறுமாந்திருத்தற்குப் போதுமே. எண்ணிய இன்பங்களல்லாமல் உன்னால்எண்ணவும் இயலாதஇன்பங்களுக்கெல்லாம், இந்நிச்சயம் உறைவிடமாயிற்றே. தன் ஆன்மாவின் நிரந்தர உண்மையை நினைக்கவல்ல ஆற்றலால் நேர்கின்ற இறுமாப்பு இஃதொன்றே ஈறிலின்பம்—தெய்வத்திருவருள் வாய்ந்த திருநாவுக்கரையர்,

இறுமாந் திருப்பன்கொலோ—ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன்கொலோ

என்று பாடியவப் பெருவாக்கின் உறுபொருள் இதுவே. அநாதியாய ஆன்மகோடிகளில் தானும் ஒன்றாய் எண்ணியவுடன் இணையிலாத் தூய்மைவாய்ந்த அவ்விறுமாப்பு எய்துதற்குரிய இடன் வந்தெய்கின்றது. இவ்விறுமாப்பினால் ஓங்கிய உத்தமர்களோ உடனுக்குடன் அடங்கியும்விடுவர்.எம்பெருமான் சேவடிக்கீழ்ச் சென்று இறுமாந்திருத்தலினும் உண்மையாய அடக்கம் மற்றொன்றுளதோ. அவ் வீசன் சேவடிகளை எவ்வயின் தேடி எவ்வகை நாடுவேன் என்றாலோ—

தேடிக் கண்டுகொண்டேன்—திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணுத்தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்

என மீண்டுமவ் வப்பரே நிறுவுகின்றார். நம்மனோர் இதனைக் குறிக்கொள்வதல்லால் வேறோர் நன்மையில்லை. மற்றக் குறிகளெல்லாம் இடும்பைக்கே இலக்காகி நிற்கின்றன. தத்தம் உரிமையால் பெருமையால் இறுமாந்திருக்க வேண்டுமென்று கசியவேண்டா. 'இவை இல்லையேல் நான்குபேர்முன் நான் எப்படித் தலைநிமிர்ந்து நிற்பேன்'' என்கின்றான் தனிமனிதன். "இவையில்லையேல் உலகின் மற்ற நாடுகளுக்குமுன் நம்முடைய நாடு எப்படித் தலைநிமிர்ந்து நிற்கும் என்கின்றான் தேசபக்தன். அப்பர்பெருமானோ, தன் முன்னேயே தான் தலைநிமிர்ந்து நிற்கும் அரியவவ் வான்ம நிலையைக் கற்பித்தார். இவை இரண்டினில் எது அரிது எது பெரிது, இடையறு இன்பத்திற் குறைவிடமாய தெது! இறுமாந்திருக்கவேண்டுவோர் இதனைத்தான் சிறிதுணர்ந்தாலாகாதோ! இவ்வுணர்வினை உவந்தழைத்தூட்டும் கலைகளினிடத்துச் சிறிது கண்ணோட்டம் கொள்ளத்தான் கூடாதோ!

தமிழ்ப் பாடம் 4.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[46-வது பக்கத் தொடர்ச்சி]

8\. சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான்—மாத
ரருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு.

பதப்பிரிவு:—சீதம் மதி குடை கீழ் செம்மை அறம் கிடப்ப தாது அவிழ் பூ தாரான் தனி காத்தான் மாதர் அருகு ஊட்டும் பசுமை கிளியும் ஆடல் பருந்தும் ஒரு கூட்டில் வாழ உலகு.

அன்வயம்:-தாதுஅவிழ் பூந்தாரான், மாதர் அருகு ஊட்டும் பைங்கிளியும் ஆடல் பருந்தும் ஒரு கூட்டில் வாழ, சீதமதிக் குடைக்கீழ் செம்மை அறம்கிடப்ப, உலகு தனிக் காத்தான்.

கருத்து:—கிளியும் பருந்தும் தம்முள் இயற்கையாயுள்ள பகையையும் மறந்து ஒரு கூட்டில் ஒத்து வாழும்படி நளன் செங்கோல் வழுவாமல் குளிர்ந்த தன் குடைநிழலில் தனக்கெவரும் ஒப்பிலாவகை உலகத்தைக் காத்தான்.

பதவுரை.

தாது - மகரந்தப்பொடி
அவிழ் - உதிர்கின்ற
பூ - பூக்களால் கட்டிய
தாரான் - மாலையை அணிந்த நளன்,
சீதம் - குளிர்ந்த
மதி - சந்திரன் போன்ற
குடைக்கீழ் - தனது குடையின்கீழ்
செம்மை - நேர்மையான
அறம் - தருமங்கள்
கிடப்ப - தங்கியிருக்க,
மாதர் - மாதர்கள்
அருகு - தமது அருகில் வைத்து
ஊட்டும் - உணவு ஊட்டுகின்ற
பை - பச்சையான
கிளியும் - கிளிகளும்
ஆடல் - (கிளிபோன்ற பறவைகளோடு இயற்கையில்) போர்செய்யும்

பருந்தும் - பருந்துகளும்
ஒருகூட்டில் - ஒரேகூண்டில்
வாழ - நட்புடன் வாழும்படி
உலகு - உலகத்தை
தனி - நிகரில்லாமல்
காத்தான் - காத்தான்.

விளக்கம்:—காத்தான்-காப்பாற்றினான்,(பயனிலை) யார் காத்தான்? தாரான் - மாலையை அணிந்தவன் (எழுவாய்). எப்படிப்பட்ட தாரான்? அவிழ் - அவிழ்கின்ற - உதிர்கின்ற. எது அவிழ் தாரான்? தாது அவிழ் தாரான் - மகரந்தம் (புஷ்பரேணு) சொரிகின்ற மாலையை அணிந்த நளன். அவன் எதைக் காத்தான்? உலகு - பூமியை. தாரான் உலகை எப்படிக் காத்தான்? தனிக் காத்தான் - தனி (unique) - நிகரில்லாதபடி காத்தான். அப்படி அவன் தனிக்காத்தது எந்தக் காரணத்தால்? கிடப்ப - தங்கியிருந்ததால். எது கிடப்ப? அறம் - தருமங்கள். எப்படிப்பட்ட அறம் கிடப்ப? செம்மை அறம் கிடப்ப - நேர்மையான தருமங்கள் தங்கியிருக்க. செம்மை அறம் எங்கே கிடந்தது? கீழ் - கீழே. எதன் கீழ்? குடைக்கீழ்-குடையின்கீழ். அந்தக்குடை எது போன்றது? மதிக்குடை - சந்திரனைப்போன்ற குடை. சந்திரன் எப்படிப் பட்டது? சீத மதி- குளிர்ந்த மதி. தன் குடையின்கீழ் தருமம் நிலைத்திருக்க அந்தக் காரணத்தால் என்ன காரியம் நிகழும்படி நளன் உலகத்தை ஒப்பில்லாமற் காத்தான்? வாழ-வாழும்படி. எது வாழ? பருந்தும் கிளியும் வாழ. எங்கு வாழ? ஒரு கூட்டில் வாழ. பருந்தின் தன்மை எப்படிப்பட்டது? ஆடல் பருந்து - போர்செய்தலைத் தனக்குத் தொழிலாக உடைய பருந்து. கிளி எப்படிப்பட்டது? பைங்கிளி - பச்சைக்கிளி. பச்சைக்கிளியின் தன்மை எப்படிப்பட்டது? ஊட்டும் கிளி- ஊட்டுகின்ற கிளி. யார் ஊட்டும் கிளி? மாதர் (உணவு) ஊட்டும் கிளி. எங்கு வைத்துக்கொண்டு ஊட்டுகின்ற கிளி? மாதர் அருகு ஊட்டும் கிளி - மாதர்கள் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஊட்டுகின்ற கிளி.

விரிவுரை:—நம் தமிழ்நூற்களில் பெரும்பான்மை அரசன் நாட்டைக் காத்தான் அளித்தான் என்று அவன் குடிகளுக்குச் செய்யும் கடமை காட்டப்பட்டிருக்குமேயல்லாது, ஆண்டான் என்று, அவன் அதிகாரத்தையே நினைப்பூட்டும் சொற்கள் பொதுவாக வாரா. சக்ரவர்த்தியா யிருப்பவனைப்பற்றிப் பேசும்போது அவன் மற்றஅரசரை ஆண்டான் என்றும் குடிகளைக் காத்தான் என்றும்கூடத் தமிழாசிரியர் பிரித்துக் காட்டுவார். தமிழரசர் தம் நாட்டைக் காத்தலின்றி ஆள்வது அறியார்.

பருந்தும் கிளியும் ஒரு கூட்டில் வாழ்வது, எளியோரை வலியோர் நலியாதிருப்பதற்கும், இயற்கையாய் வரும் பகையையும்கூட மறந்து உயிர்கள் ஒத்து வாழ்வதற்கும் அடையாளம். பருந்தும் கிளியும் ஒன்றாக வாழ்ந்த கூடு, வீட்டிலே பறவைகளை அடைத்து வைக்கச் செய்துமாட்டும் கூண்டன்று; பறவைகள் மரங்களிலே தமக்காகக் கட்டிக்கொள்ளும் கூடுகள். மாதர் அருகூட்டும் பைங்கிளி, என்றது மாதரும் பயமின்றிக் கையில் வைத்துச் சோறூட்டத்தக்க அவ்வளவு சாதுவான கிளிகள், என்றுகிளிகளின் பொதுத் தன்மையைக் காட்ட வந்த அடைமொழிகள் (descriptive epithets) மாதர்கள் கையில் ஊட்டிய கிளிகள்தாம் பருந்தோடு சேர்ந்து வாழும் என்றுசிறப்பித்துச் சொல்லவந்த (restrictive epithets) அடைமொழிகள் அல்ல. ஆடல், என்பதற்குப் போர் செய்தல் என்று அர்த்தம். ஆடல் பருந்து என்று, சாத்விகக் கிளிகளுக்கு மாறாகப் பருந்துகளின் பொதுவான துஷ்டத்தன்மையும் காட்டப்பட்டிருக்கின்றது. கிளியும்பருந்தும் போன்ற பறவைகளே இப்படிஒத்து வாழ்ந்தன என்றால், இயற்கையிலேயே ஒற்றுமையாயிருக்கவேண்டிய மாந்தரைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! இந்த ஒற்றுமை, காரியம்; இதற்குக் காரணங்கள் எவையோவெனில், அரசனது அருளும் அறமும்என்று கவி காட்டுகின்றார். அரசனது குடை, நிழலளித்து உலகத்தைக் காப்பதற்கு அடையாளம். கருணை குளிர்ந்ததாதலால் அக் குடைக்குச் சீதமதி உவமையாயிற்று. அரசன் அன்போடும் அறத்தோடும் உலகத்தைக் காப்பதே கருத்தாயிருந்ததால் குடிகள் இன்புற்றுத் தம்முள் யாதும் மாறுபாடின்றி வாழ்ந்தனர், என்று கூறுவதினின்று தமிழ்க்கவிகள் அரசியல்தத்துவத்தின் காரணகாரியத் தொடர்புமுறையைப்பற்றிச் சிந்தித்திருந்தவண்ணத்தின் உண்மை நாம் ஊன்றிக் கருதத்தக்கது.

குறிப்பு:—ஒன்றன் பெயரைச் சொல்கின்ற சொல், பெயர்ச் சொல். வா போ புரள் புகு கிட பேசு வாழ் என்பன போன்று ஒரு காரியத்தைச் செய்விக்கும் சொற்கள் வினைச்சொற்கள். இனி, இந்த வா என்னும் வினைச்செல் பல மாதிரியாக வரும்:— (1) வந்தான் வருகிறான் வருவான், வந்தாள் வருகிறாள் வருவாள், வந்தார் வருகிறார் வருவார், வந்தது வருகின்றது வரும், வந்தன வருகின்றன வரும், வந்தேன் வருகிறேன் வருவேன், வந்தோம் வருகிறோம் வருவோம், வந்தாய் வருகின்றாய் வருவாய், வந்தீர் வருகின்றீர் வருவீர்.

இந்தப் பதங்களை எல்லாம் பார்த்தால், செய்தகாரியம் எது? (வருதல்)-அதனைச் செய்தது யார்? அவனா அவளா அவரா அதுவா அவையா, அல்லது நானா நாங்களா, நீயா நீங்களா; செய்த காலம் எது, முன்னா இப்பொழுதா இனிமேலா; என்பவைகளை யெல்லாம் அறிந்துகொள்ளலாம். இவைகளையெல்லாம் காட்டி முடிவதால் இப்படி வருகின்றவைகளுக்கு எல்லாம் பொதுவாக வினைமுற்று என்று பெயர். அப்படிக்கில்லாமல், வந்த வருகிற வரும் என்றாவது, வந்து வர வரின் என்றாவது, நிற்குமானால், செய்த காரியம் எதுவென்றும் செய்த. காலம் எதுவென்றும் தெரிகின்றதேயன்றி வேறு பதங்களோடு சேர்த்துப் பார்க்காமற் போனால் செய்தது யார் என்பது தெரியவில்லையன்றோ. அது குறைந்திருக்கின்றது. ஆகையால் இம்மாதிரி வரும் வினைகளுக்கு எச்சம் என்று பெயர். (எச்சம்-குறைவு.) இப்படி வருகின்ற எச்சங்கள் பொருளில் பூர்த்தியாவதற்கு அவை வேறு சில சொற்களைச் சேர்ந்து முடியும். வந்த என்பதை, ஒரு சொல் கொடுத்து முடிக்கவேண்டுமானால், வந்த பையன் வருகின்ற பையன், வரும் பையன், எனப் பெயர்ச் சொற்கள் தான் அதன்பின் அர்த்தத்தில் பொருந்தக்கூடும். இப்படிப் பெயர்ச்சொல்லைக் கொண்டுதான் முடியக்கூடிய எச்சங்களுக்குப் பெயர்எச்சம் என்று பெயர். வந்தகொடுத்தான், என்றுசொன்னால் அர்த்தமேஇல்லையல்லவா? ஏனென்றால், கொடுத்தான் என்னும் அது

கொண்டுமுடியக் கூடாதசொல் வினைச்சொல். மற்று வந்துகொடுத்தான் என்று முடியக்கூடும். வந்துசொன்னான், வரச் சொன்னான், என்பவைகளில், வந்து வர என்பனபோன்ற வினைச்சொற்கள்வேறுஒரு வினையையே கொண்டுமுடியும். அப்படி வினையையே கொண்டு முடியக்கூடிய வினைச்சொற்களுக்கு வினையெச்சம் என்றுபெயர். வந்த, பேச, நிற்க போன்ற சொற்களுக்குக் கொண்டுமுடிகின்ற பெயர் குறைவாயிருப்பதால் அவைகளுக்குப் பெயரெச்சம் என்றும், வர பேசி நின்று போன்ற சொற்களுக்குக் கொண்டுமுடிகின்ற வினைச்சொற்கள் குறைவாயிருப்பதால் இவைகளுக்கு வினையெச்சம் என்றும் பெயர்வந்தது. பெயரெச்சம் வினையெச்சம் இரண்டும் வினைச்சொற்கள்தாம். முன்னதைப் பெயரெச்சம் என்று கூறுகிறபடியினால் அது பெயர்ச்சொல்லோவென்று மயங்காதீர்கள். பெயரைக் கொண்டுமுடிகிற எச்சவினையாதலால் அது பெயரெச்சம். (வரும் பேசும் நிற்கும் என்பனபோன்ற உருவங்கள், வரும் பையன், பேசும் கிளி, நிற்கும் குதிரை என்ற வாக்கியங்களில் பெயரெச்சமாகவும்; அவைகளே மறுபடி, மழைவரும், கிளிபேசும், குதிரைநிற்கும் என்று மாறினால் வினைமுற்றுக்களாகவும் ஆவதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.)

இனி, வினையெச்சங்கள், வர செய்ய அடிக்க, என்பனபோன்றிருந்தால் மூன்று விதத்தில் பொருளைக் காட்ட உதவிசெய்யும். அது காரியப்பொருளில் வருவது சாதாரணம். நெல் விளைய மழைபெய்தது, என்ற வாக்கியத்தில் விளைய என்பது எச்சம். அது அர்த்தத்தில் பெய்தது என்னும் வினைச்சொல்லைக் கொண்டு முடிவதால் வினையெச்சம். மழை பெய்தது காரணம், அந்தக் காரணத்தால் நெல் விளைந்தது காரியம். ஆகையால் விளைய என்பது, 'விளைவதற்கு'' என்று காரியப்பொருளில் வந்த வினையெச்சம். இந்த வாக்கியத்தைச் சிறிதுமாற்றி 'மழைபெய்ய நெல் விளைந்தது' என்று சொன்னால் காரண காரியமும் முறையாய் விளங்கும். பெய்ய, என்பது விளைந்தது என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகிற வினையெச்சம். மழைபெய்ததால், என்றுகாரணத்தைக்காட்டுகின்றது. இந்தக் காரணத்தால் உண்டான காரியம் நெல்விளைதல். மழை பெய்வதற்காக நெல் விளையவில்லை. நெல் விளைவதற்காகத்தான் மழை பெய்யும். ஆகையால் மழைபெய்ய நெல் விளைந்தது என்னும் போது, பெய்ய என்பது காரணப்பொருளில் வந்த வினையெச்சம். காரணம் காரியம் இரண்டையும் காட்டாமலும் கூட இந்தமாதிரி வினையெச்சங்கள்வரலாம். ' சூரியன் உதிக்க இராமன் வந்தான் '' என்பதில் உதிக்க என்னும் வினைபெச்சம் எதைக் காட்டுகின்றது? சூரியன் உதிப்பதற்காக இராமன் வந்ததில்லையாகையால் அது காரியப்பொருள் அன்று. சூரியன் உதித்ததால் இராமன் வந்ததில்லை யாகையால் அது காரணப் பொருளுமன்று. சூரியன் உதித்ததும் இராமன் வந்ததும் ஒன்றாய் நிகழ்ந்தன என்பதையே 'உதிக்க' என்னும் அவ் வினையெச்சம் காட்டுகின்றது. இப்படி இரண்டு நிகழ்ச்சிகளும் ஒன்றாய் நேர்ந்தன என்பதைக் காட்டும் வினையெச்சங்கள் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த வினையெச்சங்கள்.

காமர் கபல்புரள, என்று ஆரம்பிக்கும் முதல்செய்யுளில் புரள நெகிழ அவிழ என்பன வினையெச்சம். புரள்வதால் நெகிழ்வதால் அவிழ்வதால் என்று காரணத்தைக் காட்டி (அந்நாடு நிலமகளின் கண்போன்ற) தகைமைத்து, என்ற வினையைக் கொண்டு முடிகின்றன. ஆதலால் அவை காரணப்பொருளில் வந்த வினையெச்சங்கள். பிறகு, நின்றுபுயல்வானம், என ஆரம்பிக்கும் மூன்றாவது செய்யுளில் புகுந்து என்பது புகுந்ததால் என்று காரணத்தைக் காட்டிக் கமழும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிவதாய்க் காரணப்பொருளில் வந்த வினையெச்சம்.

மறுபடி இந்தச் செய்யுளில், கிடப்ப வாழ என்று இரண்டு வினையெச்சங்கள் இருக்கின்றன. இவைகளில் கிடப்ப என்பது கிடந்த காரணத்தால் என்று காரணத்தைக் காட்டும். அந்தக் கிடப்ப என்னும் வினையெச்சம் வாழ என்னும் மற்ற வினையெச்சத்தைக் கொண்டு முடிகிறது. வினையெச்சம் வேறொரு வினைச்சொல்லைக்கொண்டு முடியவேண்டுமென்னும் விதியிருக்கின்றதே ஒழிய வினைமுற்றைத்தான் கொண்டு முடியவேண்டுமென்னும் விதியில்லை. வினையெச்சம் கொண்டு முடிகின்ற பதம், வினைமுற்றாய் இருக்கலாம், வினையெச்சமாய் இருக்கலாம், அல்லது பெயரெச்சமாயும் இருக்கலாம். உழுது விதைத்தான்—இங்கு உழுது என்னும் வினையெச்சம் விதைத்தான் - என்பதோடு சேர்கின்றது. உழுது விதைக்க நெல் விளையும், இங்கு உழுது என்னும் வினையெச்சம் விதைக்க என்னும் மற்றொரு வினையெச்சத்தையே சேர்ந்து பொருள் தரும். உழுது என்பது விளையும் என்பதைக்கொண்டு இங்கு முடிவதற்கு அர்த்தம் இடம் தராது. உழுது விதைத்த வயலே விளையும், என்னும்போது உழுது என்னும் வினையெச்சம் விதைத்த என்னும் பெயர்எச்சத்தையும் கொண்டு முடிகின்றதல்லவா?

ஆதலால், கிடப்ப என்னும் வினையெச்சம் வாழ என்னும் மற்ற வினையெச்சத்தைக் காரணப்பொருளில் கொண்டுமுடிகின்றது. இனி, வாழ என்னும் வினையெச்சம், காத்தான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடியும். இது காரியப் பொருள், வாழ்வு ஆகிய காரியம் அல்லது பயனை உலகம் அடையும்படி நளன் காத்தான். அந்த வாழ்வுஎன்னும் காரியத்திற்கு அல்லது பயனிற்குக் காரணம் அறம் கிடத்தல். ஆதலாற்றான், அரசன் தர்மங்களைப் பரிபாலிப்பதுவே குடிகளின் ஒற்றுமையான நல்வாழ்விற்குக் காரணம் என்பது புகழேந்திப்புலவரது கொள்கை ஆவதைத் தேர்ந்து அக்கொள்கையின் சிறப்பையும் அறியலானோம். வினையெச்சங்களின் இலக்கணம் தெரியாமற் போனால் கிடப்ப வாழ என்னும் இரண்டையும் காரியப்பொருளில் வந்த வினையெச்சங்கள் என நினைத்து, அறம் கிடக்கவும் கூட்டில் வாழவும் காத்தான் என்று ஒரே வினைமுற்றைக் கொண்டு முடித்துவிட்டுக் கவியினது இருதயத்திற்கும் கண்டபொருளிற்கும் வெகுதூரமாய் நிற்கநேரிடும். கவியினுடைய உண்மையான கருத்தை யறிவதற்குச் சிறிது இலக்கணம் தெரியவேண்டியது அவசியம். அந்த அளவு இப்பாடங்களின் மூலமாய்க் கற்றுக்கொள்வதும் மிக எளிது.

குன்றுடையானும் மக்களும்

[48-வது பக்கத் தொடர்ச்சி]

3. குன்றுடையான் ஓர் ஐயன்மார் ஊரை அடைந்தது.

நோயாலும் பசியாலும் அடியாலும் சோர்வுற்றுக் குன்றுடையான் தளர்ந்த நடையினனாகி, முன்பின் பாராமல் ஆறுநாழிகை தூரம் சென்றபிறகு, ஒரு காடு குறுக்கிடக்கண்டான். அவன் அக்காட்டுவழியே செல்கையில், வழியிற்கிடந்த பாம்புகள் அவன்வரும் காலோசை கேட்டுச் சரசரவென நகர்ந்து அப்புறம் போயின. ஒரு பக்கத்தில் குள்ளநரிகள் ஊளையிட்டன. வழியின் இருமருங்கிலும் தழைத்து வளர்ந்த செடிகளில் அடிமுதல் நுனிவரையிலும் இடையீடின்றி மின்மினிப் பூச்சிகள் மொய்த்துப் பளிச்சுப் பளிச்சென ஒளிர்ந்தன. அங்கங்கே குறுகிவளர்ந்த மரங்களும் கற்பாறைகளும் அவ்விருட்டில் பயங்கரமான உருவங்களைப் பெற்றுக் குன்றுடையான் தம்மையணுகின அளவில் ஏதாயினும் தீங்குபுரிய நிற்பன போல் தோன்றின. இருபக்கங்களிலும் வளர்ந்திருந்த புதர்களை இவன் நெருங்கிச் செல்கையில் அவற்றினுள்ளே மறைந்திருந்த விலங்குகளும் பறவைகளும் ஊர்வனவும் தன்னைக் குறுகுறுவென நோக்கின என்றெண்ணி அஞ்சினான். புலி சீறித் தன்னிரையைக் கொல்ல, அது வருந்திப் புலம்பியஓசை மறுகணத்தில் மறைந்ததைக் கேட்டான். அன்றிரவு, வானம் மேகத்தாற் சிறிது இருண்டிருந்தது; இளங்காற்று வீசிற்று. இரவின் தன்மையும் இளங்காற்றும் அவனுக்குப் புத்துயிர் அளித்தன.

அவன் அக்காட்டைக் கடந்து போகும்வழியில் ஒரு சிற்றூர் இருந்தது. அந்த நேரத்தில், அங்கே ஒரு பிராணியும் வெளியே காணப்படவில்லை. அவன் தூரத்தே போவதைக்கண்ட ஓரிரு நாய்கள் குலைத்து ஊளையிட்டன.

குன்றுடையான் பின்னுஞ் சிறிதுதூரம் சென்றபின் வானம் இருண்டது; எங்கும் இருள் கவிந்தது; எதிரில் தோப்பு ஒன்று தென்பட்டது. அவன்சென்ற வழி அத்தோப்பைச் சுற்றிப்போனதை அவ்விருளில் அவன் அறிந்துகொள்ளாமல் வழிதவறித் தோப்பினுள்ளே நுழைந்தான். அங்கே தன் உள்ளங்கையும் கண்ணுக்குத் தெரியாதபடி இருள் மூடியிருந்தது. மரங்களிற் பூச்சிகள் கீச்சிட்டன. குன்றுடையான் தன் கைகளைப் பரப்பித் தடவிநடந்து மரங்களின்மேல் மோதினான். சில கிளைகள் அவன் தலையிலிடித்தன, சில அடிமரங்களில் அவன்கால்கள் பட்டு நொந்தன. இரண்டு நாழிகைநேரம் இவ்வாறு அத்தோப்பினுள்ளே சுற்றிச்சுற்றி யலைந்தும் அத்தோப்பின் எல்லையைக் காணாதவனாய், அது மிகப் பெரிய காடென்றெண்ணி, மெதுவாய் நடக்கையில் ஒரு மேட்டின்மேல் கால் வைத்து, சறுக்குண்டு, நிலைதவறி ஒரு குழியில் வீழ்ந்தான். விழுந்தவன் எழுந்திருக்கமாட்டாதவனாய், சிறிது ஈரம்புலர்ந்த கம்பளியையும் கவைக்கோலையும் பக்கத்தில் வைத்து, காலிடறிய மேட்டைக் கையால் தடவிக் கண்டுபிடித்து, மெல்ல நகர்ந்து, அதன்மேற் சாய்ந்துகொண்டு சிறிது இளைப்பாறுகையில், அங்கேயே இன்னுஞ் சிறிதுநேரந் தங்கியிருந்து விடிந்தபின் போவதே கருமமென்று தீர்மானித்து, தனது நிலைமையைப்பற்றிச் சிந்திக்கத்தொடங்கி, வழிநடந்த களைப்பாலும் பசியாலும் மெய்ம்மறந்து தூக்கத்திலாழ்ந்தான்.

குன்றுடையான் திடீரெனக் கண்விழித்து எழுந்திருந்து பார்க்கையில், பொழுதுபுலர்ந்து நான்குநாழிகை சென்றிருந்தமையை உணர்ந்தான். தான்பெரிய காடென்று நினைத்தது, நூறு புளியமரங்கள் நெருங்கி வளர்ந்த ஒரு சிறிய தோப்பென்பதையறிந்து, சிறிது வெட்கி, அவ்விடத்தே தங்கியிருக்க இசையாதவனாய் மெல்ல எழுந்து, கம்பளியைமடித்துக் கொங்காடையிட்டு, கவைக்கோலை யூன்றி மீண்டும் வழிநடந்தான்.

சோளமும் வரகும் கொள்ளும் விளையுஞ் சில விளைநிலங்களைக் கடந்தான்; சில தோப்புக்களையும் துறவுகளையுங் கடந்தான்; கல்லும் முள்ளும் நிறைந்த சில காடுகளைக் கடந்தான்; சில கறடுகளையும் குன்றுகளையும் கடந்தான்; மூங்கில் வளர்ந்த மலைகளைக் கடந்தான். காட்டுச்செடிகளும் முட்புதர்களும் இலந்தை மரங்களும் நெருங்கிவளர்ந்த ஒரு காட்டிற் செல்கையில், புலி கரடி முதலிய மிருகங்கள் குறுக்கிட, இவன் அவற்றைப் பாராமலும் அஞ்சாமலும் நேரே வருதலைக்கண்டு அவைகள் மிரண்டோடின. பசியாலும் தாகத்தாலும் வெய்யிலாலும் வாடி, அவன் வழியிலிருந்த ஒரு வேப்பமரத்தடியில் உட்கார்ந்து, செல்லாண்டியம்மனை நினைந்து புலம்பி, சிறிது இளைப்பாறியெழுந்து, மீண்டும் நடக்கலுற்றான்.

இவ்வாறு குன்றுடையான் அடிசாயும் வரையில் நடந்து நடந்து சோர்ந்தான். அவன் கண்கள் பஞ்சடைந்தன; காதுகள் அடைபட்டன; நாக்குவறண்டு தழுதழுத்தது; கால்கள் உணர்ச்சியற்று ஒன்றோடொன்று பின்னிக்கொண்டன; வயிறு அழன்றது. அப்பொழுது அவன், தனக்குமுன்னால், ஒரு நாழிகை தூரத்திலே, வெய்யிலில் மிளிரும் தென்னைமரங்களுக்கும் வாழைமரங்களுக்கும் இடையிடையே, ஓடுவேய்ந்த வீடுகளைக்கொண்ட ஒரு சிற்றூரைக் கண்ணுற்றான். *

குன்றுடையான் அவ்வூரை யணுகுதலும், தோளின்மேற் கலப்பையைச் சார்த்தி, இரண்டு எருதுகளை ஓட்டிக்கொண்டு ஒரு குடியானவன் எதிரே வந்தான். அவன் குன்றுடையானது பஞ்சக்கோலத்தைக்கண்டவுடன் திகைத்துநின்று, 'இது என்னப்பா?' என்று கேட்டான். குன்றுடையான் மறுமொழிசொல்ல இயலாதவனாய், தன் வயிற்றையும் வாயையும் தொட்டுக்காட்டிக் கைவிரித்தான். குடியானவன், 'பயப்

* அவ்வூரின்பெயர் ஓமந்தூர். அது, சில வருடங்களுக்கு முன் ஐயன்மார் நூறு வீட்டார் குடியேறிய ஒரு புதுக்கிராமம். அந் நூறுவீட்டாருக்கும் தலைவராயும் பணத்தில்மிகுந்தவராயுமிருந்தவர், சின்னசாமி ஐயர் என்பவர். அவர் ஈகைக்கும் இரக்கமுள்ள நெஞ்சிற்கும் பெயர்போனவர். அவருடைய மனைவி கண்ணம்மாள் கணவனுக்கேற்ற இல்லாள், அவரது நற்குணங்களெல்லாம் வாய்ந்தவள். சின்னசாமி ஐயருக்கு வயது ஐம்பதாகியும் மகப்பேறு உண்டாகவில்லை. கணவனும் மனைவியும் பிள்ளைப்பேற்றின்பொருட்டு ஏழைபாழைகளுக்குக் கைகோணாமல் அன்னதானஞ்செய்தனர்; பட்டினிகிடந்து நிலத்திற்படுத்துப் பிள்ளைக்கலி தீர்க்குமாறு ஆண்டவனை வேண்டினர். அவர்கள் போகாத கோவிலும் ஆடாத தீர்த்தமும் அந்நாட்டி லில்லை.

படாதே. அந்தப் புண்ணியவான் சின்னசாமிஐயர் இருக்கிறவரையில் ஏழை பரதேசிகளுக்குக் குறைவு வராது. நான் அவருடைய பண்ணை பார்க்கும் குடியானவன்தான். கொஞ்சங் கஷ்டப்பட்டு நடந்தாயானால் உனக்கு வயிறுநிறையக் கஞ்சியூற்றுவார்; அவரிடத்திற்குப் போ' என்று உறுதிசொல்லி நடந்தான். சிறிதுதூரஞ் சென்று அவன் திரும்பிநின்று, குன்றுடையானைக் கூவி, 'அரசடி விநாயகன் கோவிலுக்குப் பக்கத்தில் ஊருக்கு முதல்வீடு அவருடையது. நேரே அங்கே போ' என்று சொல்லி யேகினான்.

குன்றுடையான் அரசடிவிநாயகன் கோவிலைக் கடந்து, பக்கத்திலிருந்த சின்னசாமிஐயர் வீட்டையடைந்தான். வாசற்கதவு மூடியிருந்தது. கதவை மெல்லத்திறந்து உள்வாசலில் நுழைந்தான். அங்கே ஒருவரும் இல்லை. உள்வாசலும் திண்ணைகளும்சாணத்தால் மெழுகப்பெற்றுத் தூய்மைக்கும் தண்மைக்கும் உறைவிடமாயிருந்தன. சுவர்களில் காவிக்கோடுகள் ஒழுங்காக வரையப்பட்டிருந்தன. உள்வாசற் கதவும் மூடியிருந்தது. மணியடிக்கும் ஓசையும் தூபதீப நறுமணமும் காற்றோடுகலந்து உள்வீட்டிலிருந்து வெளியே பரவின. குன்றுடையான் கையூன்றிப் புழுதிபடிந்த கால்களோடு மெல்லத் திண்ணையேறி, கம்பளியைத் தலைக்குக்கொடுத்துக் கவைக்கோலைப் பக்கத்திற் கிடத்தி, ஓய்ந்து படுத்தான். அவ்வளவிலே சோர்வின் மிகுதியால் அவன் கண்களும் தலையும் சுழன்றன, உடம்பு வியர்த்தது. அவன் உணர்ச்சியற்றுக் கண்களை மூடினான்.

சின்னசாமிஐயர் பூசையை முடித்துப் போசனம் உண்டு, கைகால் சுத்தம்பண்ணி, உள்வாசற்கதவைத் திறந்து, 'அடியே, கண்ணு, வெற்றிலைபாக்குக் கொண்டு வா' என்று மனைவி கேட்குப்படி உரத்துக் கூவி, வெளியே வந்து, தமது தோளின்மேற் கிடந்த துண்டையெடுத்துத் திண்ணையிலிருந்த குப்பையை அடித்து, 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லிக்கொண்டே அவ்விடத்தில் உட்கார்ந்து சுவரில்சாய்ந்தார். அருகிலிருக்கும் மற்றொரு திண்ணையின் பக்கம் தமதுபார்வையைச் செலுத்தவே குன்றுடையான் அங்குஉணர்ச்சியற்றுக் கிடப்பதைக்கண்டார். விரைந்தெழுந்தார்; நெகிழ்ந்த அரைவேட்டியை இறுக்கிக்கட்டி, குன்றுடையான்பக்கல் குந்திக்குந்தி நடந்து, அவன்முகத்தை உற்றுநோக்கினார்; ஐயருக்குக் கைகால்கள் நடுங்கின. அவனை அப்புறம் இப்புறம் அசைத்துப் பார்த்தார். பேச்சுமில்லை, மூச்சுமில்லை. அப்பொழுது ஐயருடைய நிலைமையும் குன்றுடையான் நிலைமையும்தம்மில் ஏறக்குறைய ஒத்திருந்தனவென்று சொல்லலாம்.

'அடீ! கண்ணு, கண்ணு, அடீ டி டி' என்று ஐயர் கூச்சலிட்டார். சாப்பிடுவதற்கு இலையில் உட்கார்ந்த கண்ணம்மாள், ஐயர்போட்ட அந்தக்கூச்சலைக் கேட்டு ஏதோவொரு அபாயம் நேர்ந்ததென்று நடுக்கமுற்று விரைந்தெழுந்து தடுமாறி, சோற்றிலையில் காலூன்றிப் பக்கத்திலிருந்த கிண்ணமும் செம்பும் அடிப்பட்டுப் புரண்டுருள, வேகமாய் ஓடி, கதவைத் திறந்து, உள்ளே நின்றபடியே தலையை வெளியே நீட்டி, 'என்ன அது? ஏன் கூக்குரலிட்டீர்கள்?' என்று நெற்றியில் வியர்வைவடிய, புருவம் மேலேற, பதற்றத்தை வெளியே காட்டாமல் சற்றுத் தாழ்ந்த குரலில் வினவினவள், கணவனுடைய முகத்தில் தோன்றிய அச்சத்தைக் கண்டு, மருண்டு, கதவை முற்றிலும் திறந்து வெளியேவந்தாள். ஐயர் இரண்டு கைகளையும் நீட்டிக் குன்றுடையானைக் காட்டினார். அவனைக் கண்டதும் அவள் நாக் குழற, 'இவன் யார்? இறந்து போனானா? இங்கே எப்படி வந்தான்?' என்றாள். மனைவி பக்கலிலிருந்தமையால் ஐயர் சிறிது தைரியமடைந்து, குன்றுடையானை மீண்டும் இரு கைகளாலும்பற்றிக் குலுக்கி, 'யாரப்பா? யாரப்பா?' என்றார். மறுமொழியில்லை.

குன்றுடையான் பசியாலும் களைப்பாலும் சோர்ந்திருந்தான் என்பதைக் கண்ணம்மாள் கணவனிலும் விரைவாயுணர்ந்து, வீட்டினுட்சென்று, கைகழுவி, ஒரு கலத்திலே மோர்விட்டுக் கரைத்தசோற்றைக் கொணர்ந்து, 'பசியால் மிகவும் சோர்ந்திருக்கிறான்; அவன் வாயைத் திறவுங்கள். இந்தச் சாதத்தை வாயில் ஊற்றிப்பார்ப்போம்'' என்றாள். ஐயர் குன்றுடையானை இழுத்து, நேராகப் படுக்கவைத்து, அவன் தலையை நிமிர்த்தி வாயைத்திறக்க, கண்ணம்மாள் சிறிதுசிறிதாக மோர்ச்சாதத்தை அவன்வாயினுட் செலுத்தினாள். ஈரம்புலர்ந்த தொண்டையினுள்ளே மோர் இறங்குதலும், குன்றுடையான் 'நடக்' என்று விழுங்கினான். விழுங்கின ஓசைகேட்டுக் கணவனும் மனைவியும் அவன் பிழைத்தானென்று மகிழ்ந்தனர்.

சிறிதுநேரத்தில் குன்றுடையான் கண்கள் திறந்தன. அவன் புரண்டுபடுத்து, 'அண்ணா! அண்ணா! அடியாதே; இனிமேல் நான் சரியாய் மாடுமேய்க்கிறேன்' என்று சொல்லி மீண்டும் கண் மூடினான்.

குன்றுடையான் பெருந்தூக்கம் தூங்குகின்றான். ஐயர் திண்ணையிலுட்கார்ந்து, கதவண்டையில் நிற்கும் தமது மனைவியோடு அவனைக்குறித்துப் பேசி அங்கலாய்க்கின்றார். அவன் இனிப்பிழைத்துக்கொள்வானென்றும், தம்வீட்டுக்குக் கெட்டபெயர் வாராதென்றும் மனைவி அவருக்குத் தேறுதல்சொல்லுகின்றாள்.

அன்றிரவும் மறுநாளும் குன்றுடையான், சின்னசாமிஐயரும் கண்ணம்மாளும் பரிந்தளித்த அன்னமுண்டு, இளைப்பாறி, நலிவுதீர்ந்து, எழுந்து சிறிது தூரம் நடக்கும் பலத்தையடைந்தான்.

மறுநாள், அவ்வூர்ப் பிராமணர்கள் பூசையும் சாப்பாடும் முடித்துக்கொண்டு மாலைநேரத்தைக் கழிப்பதற்குச் சின்னசாமிஐயர் வீட்டுத் திண்ணையில் கூடியிருக்கையில், ஐயர் குன்றுடையானைத் தம் பக்கலில் அழைத்து, 'அப்பா, உன் பெயர் என்ன?' என்றார். அவன், 'என்பெயர் குன்றுடையாக் கவுண்டன், என் தகப்பன்பெயர் அப்பாக் கவுண்டன். நாங்கள் காராளர்கள்' என்று மறுமொழிசொன்னான்.

'உன் ஊர் எது?' என்றார் சின்னசாமி ஐயர். 'எங்கள் ஊர் பொன்வள நாட்டிலுள்ள சிற்றூலைப் பட்டணம். நான் வாழ்ந்தவன் பிள்ளை. எனக்கு மாடு மேய்க்கத்தெரியும். உங்கள்மாடுகளை மேய்க்கச் சொன்னால் மேய்க்கிறேன். எனக்கு வயிற்றுக்குச் சோறும் உடுக்கத் துணியும் கொடுத்தால் போதும்'' என்றான் குன்றுடையான்.

'நீ ஏன் இப்படி இளைத்திருக்கிறாய்? நீ உணர்ச்சியில்லாமல் படுத்திருக்கையில், அண்ணா அடியாதே; அண்ணா, அடியாதே என்று உளறினாயே; அதற்குக் காரணமென்ன?'' என்று ஐயர் கேட்டார்.

குன்றுடையான், 'ஐயா, எனக்குப் பத்தாம் ஆண்டு நடக்கையில் என் தாய்தந்தையர் காலஞ்சென்றனர். பாய்ச்சலூரில் உள்ள பங்காளிகள் பன்னிரண்டுபேர் என்னைத் தங்களுடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய், என் சொத்தையெல்லாம் பறித்துக்கொண்டு என்னை மாடுமேய்க்க நியமித்து, ஒருநேரங்கூட வயிறு நிறைய எனக்குக் கஞ்சிவார்க்காமல் வதைத்தார்கள். இப்படியிருக்கையில், ஒருநாள், மலைக்காட்டிற்கு நான் மாடுமேய்க்கப் போயிருந்தபொழுது, குளிருங் காய்ச்சலுங் கண்டு மயங்கி விழுந்துவிட்டேன் அன்றிரவு பங்காளிகள் என்னைத்தேடிவந்து ஆளுக்கொரு உதை உதைத்தார்கள். போதாக்குறைக்கு, வீட்டுக்குப்போன பின், நங்கைமார்களையும் தம்முடன்வைத்துக்கொண்டு என்னை வாய்க்குவந்தபடி திட்டி யடித்து, வீட்டுக்கு வெளியே தள்ளி, தாழ்ப் போட்டுக்கொண்டார்கள். இந்தப்படி மானங்கெட்ட பிழைப்புப்பிழைப்பதிலும் எங்கேயாவது போய் இறப்பது நல்லதென்று அந்த ராத்திரியே புறப்பட்டு வழியில் படாத பாடுபட்டு உங்களிடம் வந்தேன். வாழ்ந்தவன் பிள்ளை. எனக்குப் பொய்பேசத் தெரியாது. உங்களுக்குச் சம்மதமானால் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் மாடுகளை நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று விடை பகர்ந்து கண்ணம்மாளைச் சுட்டிக் காட்டி, 'இந்த அம்மணி என்னைக் கண்டு, இரக்கமுற்றுக் கஞ்சிவார்த்துக் காப்பாற்றினாள். இந்த அம்மணியை நான் என் தாய்க்குச் சமானமாக எண்ணியிருக்கிறேன்' என்றான்.

அவனுடைய வரலாற்றைக்கேட்ட கண்ணம்மாள் கண்ணீர் உகுத்து மூக்குச்சிந்தினதைக்கண்ட சின்னசாமி ஐயர், மனைவிக்குக் குன்றுடையான்பால் உண்டான அன்பையுணர்ந்து, 'குன்றுடையாக் கவுண்டா, நீ இனி எங்கேயும் போகவேண்டாம். நமது வீட்டிலுள்ள எருமையை மேய்த்து, வயிறாரச் சாப்பிட்டு, சொன்னவேலை செய்துகொண்டு இங்கேயே இரு' என்று சொன்னார்.

ஐயர் சொன்னதைக்கேட்ட மற்றைய பிராமணர்கள், 'வீட்டுக்கொரு எருமையாக நமது நூறுவீட்டிலும் நூறு எருமைகள் இருக்கின்றன. இந்த எருமைகளையெல்லாம் குன்றுடையான் மேய்த்து, வேளைக்கொரு வீட்டில் சாப்பிடலாமே' என்றார்கள். குன்றுடையானும் சின்னசாமி ஐயரும் இந்த ஏற்பாட்டிற்கு இசைந்தனர்.

மறுநாள்முதல் குன்றுடையான் ஓமந்தூர்ப் பிராமணர்களுடைய எருமைகளை ஓட்டிக்கொண்டுபோய், ஊருக்குக் கீழ்ப்புறத்தில் பிள்ளையார்கோவிலுக்குப் பக்கத்திலுள்ள குளத்தில் மேயவிட்டு, குளக்கரையில் ஓர் ஆலமரத்தின் நிழலில், தன் கம்பளியை விரித்துக் கவைக்கோலைப் பக்கலில் கிடத்திக் கவலையற்றுப் படுத்திருந்து, மாலையில் எருமைகளை ஊருக்கு ஓட்டிக்கொண்டு வந்து, கட்டிவிட்டு, சோறுண்டு, சின்னசாமிஐயர் வீட்டுத் திண்ணையில் படுத்துறங்கினான். அவன் அவ்வூரில் கால்வைத்ததுமுதல் மழை தவறாமற் பெய்தது; எருமைகள் மடிநிறையச் சுரந்து பால் கொடுத்தன.

இவ்வாறாக அவன் எருமைமேய்த்து, பிராமணர்களது அருளாலும், அவர்கள்வீட்டுப் பெண்டிரின் ஆதரவாலும், சோற்றுக்கும் துணிக்கும் குறைவில்லாமல், தன் பங்காளிகளையும் அவர்கள் செய்த தீங்கையும் ஊரையும் உற்றோரையும் மறந்து, அவ்வூரில் அமைதியாகப் பத்து வருடங்களைக் கழித்தான். இப்பத்துவருடங்கள் கழியுமுன், ஓழிந்த நேரத்தில் பிராமணப் பெண்டிரிட்ட குற்றேவல் புரிந்தும், விறகுச் சுள்ளிகள் கொணர்ந்துகொடுத்தும், அவர்கள் விரும்பிக்கொடுத்த இரண்டு காசு மூன்று காசுகளை வாங்கி இரண்டுபணஞ் சேர்த்து, அப் பணத்தைக் கருத்தாய்த் தன் வேட்டியில் ஒரு மூலையில் முடிந்து வைத்தான்.

குன்றுடையான் எருமைமேய்க்கும் குளத்திற்கு ஒரு புறத்திலே, எருக்கஞ் செடிகள் செழித்து வளர்ந்த காடு ஒன்று இருந்தது. எருமைகள் மேய்ந்து கொண்டிருக்கையில் அவன் அச்செடிகளை வேரோடு பறித்துக் கற்றைகட்டிப் போட்டுவைத்து, சிலநாட் சென்றபின் நாருரித்துக் கயிறுதிரித்து, ஒவ்வொரு வீட்டிற்கும் எருமைக் கொரு தலைக்கயிறு கொடுத்து, மீந்ததைச் சுருணைசுற்றி வைத்தான்.

அவ் வையன்மாருடைய சிற்றூருக்குத் தெற்கே இரண்டுநாழிகை தூரத்தில், மாதத்துக் கொருமுறை, ஒரு சந்தை கூடுவதுவழக்கம். அக்கம்பக்கத்திலுள்ள கிராமத்தார்கள் அச் சந்தைக்குச் சென்று தமக்குவேண்டிய சிறுசெலவுகளை வாங்கிவருவார்கள். அவர் சந்தைக்குப் போகும்வழி குன்றுடையான் படுக்கும்ஆலமரத்துக்குச் சிறிதுதூரத்தில் சென்றது. அவ்வழியே போய்க்கொண்டிருந்த சில பெண்டிரைக் குன்றுடையான் கூவியழைத்து, 'தாய்மாரே, இந்தச் சுருணைகளை பெடுத்துக்கொண்டுபோய்ச் சந்தையில் விற்று, வந்த பணத்தில் நீங்கள் வெற்றிலைபாக்கு வாங்கிக்கொண்டதுபோக, மீந்ததை எனக்குக் கொடுங்கள். உங்களுக்குப் புண்ணியமாகும்' என்று வேண்டிக்கொண்டான். அப்பெண்டிரும் இசைந்து, கயிற்றைச் சந்தைக்குக் கொண்டுபோய் நல்லவிலைக்கு விற்றுத் திரும்பிவந்து 'சந்தையில் விற்பனைக்குக் கயிறு இன்று ஏராளமாய் வந்திருந்ததால் உன்கயிறு காற்பணத்துக்கு விற்றது' என்று பொய்சொல்லிக் காற்பணத்தை அவனுக்குக் கொடுப்பார்கள். அவன் இன்னவாறு பலநாட்கள் உழைத்துக் கயிறுதிரித்து விற்று மூன்றுபணஞ் சேர்த்தான். ஆக, பிராமணப் பெண்டிர் கொடுத்த காசும் கயிறுவிற்ற காசுங் கூடி இப்பொழுது அவன் கையிருப்பு ஐந்துபண மாயிற்று.

இப்படி, குன்றுடையான் யாதொரு கவலையுமின்றி மடியில் ஐந்துபணமும் முடிந்து வைத்து ஓமந்தூரில் காலங் கழிக்கையில், ஒருநாளிரவில் ஒரு கனவு கண்டான். அக்கனவு பின்வருமாறு:—

குன்றுடையான் எருமைகளைக் குளத்தில் மேயவிட்டு, ஆலமரத்தடியில் கம்பளியை விரித்துத் தூங்குகையில், தொண்ணூறு வயதுசென்ற ஒரு கிழப் பிராமணர் அங்கே வந்தார். அவருக்கு வாயில் பல்லுமில்லை, வயிற்றில் குடலுமில்லை. அவருடைய மார்பில் பூணூலும், தலையில் பின்குடுமியும், கமுக்கட்டில் பஞ்சாங்கமும் இருந்தன. அவர் குன்றுடையான் தலைமாட்டில் உட்கார்ந்து, அவனைத் தட்டியெழுப்பி, வலதுகையை நீட்டச்சொல்லி உற்றுப் பார்த்து, 'குன்றுடையாக் கவுண்டா, உனக்குக் கலியாண யோகம் வந்திருக்கிறது ஆறும்மாதத்தில் கலியாணம்நடக்கும்' என்று கூறினார். குன்றுடையான் நகைத்து, "சாமீ, என்னை மதித்து எனக்குப் பெண்கொடுப்பவர் யார்? என்று கேட்டான். கிழவர், 'அப்பா, தெற்குச் சீமையில், வெள்ளிவள நாட்டில், உன் தாயோடு பிறந்தமாமன்மார் இருவர் உண்டென்பதையும் மறந்தாயோ? அவர்கள் அங்குச் சந்தனத்தாக் கவுண்டன், குங்குமத்தாக் கவுண்டன் என்னும் பெயர்களையுடையவர்களாய் முதற் குடிகளாய் வாழ்கின்றார்கள். அவர்களில் சந்தனத்தாக் கவுண்டனுக்கு மணப்பருவமுற்ற ஒரு பெண் இருக்கிறாள். அவள் உனக்கு உரிமைப்பெண்; அந்தப் பெண்ணைத் தடுத்து மறித்துக் கட்டும் உரிமை யுனக்குண்டு. நீ நாளையே புறப்பட்டு, உன் மாமன்மாரை அடைந்து பெண் கேள்' என்றார். அது கேட்டுக் குன்றுடையான் 'ஆனால், ஆறுமாதத்தில்' என்று யாதோ சொல்லத்தொடங்கியவன், பக்கத்தில் இருந்த பிராமணரைக் காணாது ஏக்கமுற்றான்.

குன்றுடையான் விழித்தெழுந்தான்; மடியிலிருந்த பணத்தைத் தொட்டுப்பார்த்தான்; கனவை நினைந்து தனக்கு இனி வரப்போகும் கலியாணத்தை எண்ணியெண்ணிக் களிப்புற்றான்; பொழுதுவிடிதலும் அவன் சின்னசாமி ஐயரிடஞ்சென்று, 'சாமி, நான் வெள்ளிவள நாட்டுக்குப்போய் என் மாமன்மார்களைப் பார்த்துப் பெண்கேட்டுக் கலியாணஞ் செய்துகொள்ளப் போகிறேன், எனக்கு விடைகொடுக்க வேண்டும்' என்றான். ஐயரும் அவர்மனைவியும் வியப்பெய்தி, அவன் கண்ட கனவையும் அவன் மாமன்மாருடைய செய்தியையும் கேட்டறிந்து, சிறிது நேரஞ் சிந்தித்து, 'கவுண்டா, நீ கலியாணஞ் செய்துகொள்ளப்போகிறாய் என்று கேட்டும், நாங்கள் வேண்டாமென்று சொல்வோமா? மகாராஜனாகப் போய்க் கலியாணஞ்செய்து கொண்டுவா'' என்று வாழ்த்தி விடைகொடுத்தார்கள். குன்றுடையானும் மற்றப் பிராமணர்களிடத்தும் அவர்கள் வீட்டுப் பெண்டிரிடத்தும் விடைபெற்றுக் கம்பளியைத் தோளிற்போட்டுக் கவைக்கோலை யூன்றி வெள்ளிவள நாட்டுக்குப் புறப்பட்டான்.

* — — *

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[51-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 1. களம் 2.

ப்ரூடஸ்:—அங்ஙனமே செய்வேன் - (1) மற்று, பார் நீ காஸ்ஸியஸ். ஸீஸரின் நெற்றியில் கோபக்குறி ஒளிர்கின்றது. ஏனையோர் எல்லோரும் வசையுண்டவர்போல் காண்கின்றனர். கல்பர்னியாவின் கன்னம் வெளிர்த்திருக்கின்றது. ஸிஸிரோவோ, ஸெனட் சபையில் சில அங்கத்தினர் தன் கருத்தொடு மாறுபடும்பொழுது கறுவுவான்போல் இப்பொழுது தீயெழத் தன் கீரிப்பார்வையால் பார்க்கின்றான். (2)

காஸ்ஸியஸ்:—விடயம் என்னவென்று காஸ்க்கா நமக்குச் சொல்வான்.

ஸீஸர்:—ஆண்டனி! (3)

ஆண்டனி:—ஸீஸர்? (4)

ஸீஸர்:—என்னுழையராயவர் பருத்தமனிதர்களாயிருக்கட்டும்.—கலையாத தலையுடையவர், கங்குற்பொழுதில் தூங்குபவர்—அதோ அந்தக் காஸ்ஸியஸ் மெலிந்து பசித்த பார்வையை உடையவன்; அளவிற்குவிஞ்சி ஆலோசித்தவண்ணமாயிருக்கின்றான். அத்தகையினோர் ஆபத்திற்கிடமானவர்.

ஆண்டனி:—அவனை அஞ்சற்க, ஸீஸர், ஆபத்திற்கிடமானவனல்லன். உரோமப் பெருமகன் அவன், நல்ல எண்ணமுடையவன்.

ஸீஸர்:—எனினும், இன்னுமோரளவு பருமனாயிருக்கலாம் அவன் - (5) ஆயினும் அவனை நான் அஞ்சுகின்றேன் அல்லேன். இருப்பினும், என்னுடைய பேரும் அச்சம் என்பதொன்று கொள்ளவல்லதாயின், நான் விரைந்தகலவேண்டியவனாவது மெலிந்த அக் காஸ்ஸியஸையன்றிவேறு அறிகிலேன் (6). அவன் அதிகம் படிக்கின்றான். எதனையும் கருத்தூன்றிக் கவனிப்பவன். மனிதர் செய்கைகளின் உட்கருத்தை முற்றிலும் ஊடுருவி நோக்கிவிடுகின்றான். ஆண்டனி, நீ விரும்புவது

(1) நீ உரைத்தவண்ணமே, காஸ்க்காவைக் கூட்டத்தினின்று பின் னிறுத்திக்கொள்கின்றேன் என்பது பொருள். இந்தக்காரியத்தைக் காஸ்ஸியஸே செய்யாமல் ப்ரூடஸைக்கொண்டு செய்வித்தது ஏனெனச் சிந்திக்கலாம். தன்னுடன் சேர்ந்து கரவுச்செயல்கள் புரியப் ப்ரூடஸ் உடன்படுவானோ என்பதைச் சோதித்தறிவதற்குச் செய்தவொரு சிறு சூழ்ச்சியாம் இது.

(2) ஸிஸிரோ, செனட் சபையினர்களில் ஒருவன். அச்சபையினுள் தன் எண்ணத்திற்கு மாறாகப் பேசுபவரைக் கோபமுடன் தீப்பொறி பறக்கப் பார்ப்பதுபோல் இப்பொழுதும் பார்க்கின்றான். கீரிப் பார்வை, என்பது கீரிப்பிள்ளை போன்ற கண்களால் நோக்குதல்.

(3) ப்ரூடஸூம் காஸ்ஸியஸூம் ஒருபுறம் நிற்க, ஸீஸரும் ஆண்டனியும் மறுபுறம் பேசிக்கொள்கின்றனர்.

(4) ஸீஸர், ஆண்டனியைக் கூப்பிட, ஆண்டனி, என் ஸீஸரே, என்கின்றான்.

(5) காஸ்ஸியஸின் பார்வையிலிருந்தே அவன் மனத்தில் ஏதோ வஞ்சனை உறைகின்றதென்பதை ஊகித்துக் கொண்ட ஸீஸர், உலக இயல்படி, ஒற்றைநாடியாய் மெலிந்திருப்பவர்களை நம்பலாகாதென்று உரைக்கின்றான். எப்பொழும் ஏதேனும் சூழ்வினைகள் செய்ய நினைத்துக் கொண்டிருப்பவர் விரிந்துகலைந்த தலைமயிரும், இரவில் தூக்கமில்லாத கண்களுமுடையவராயிருப்பர்.

(6) அச்சமென்பது ஒருபோதும் அறியாததாயிற்றே ஸீஸர் என்னும் என்பேர். அப்படி அதுவும் ஒருநாள் அஞ்சும்படி ஆயிற்றெனின், இந்தக் காஸ்ஸியஸ் ஒருவனுக்கே அஞ்சும், என்கின்றான். இவன் அஞ்சுவதும் அக்காஸ்ஸியஸின் அழக்காலுடைய [illegible]வஞ்சனைக்கேயன்றி அவனுடைய ஆற்றலுக்கன்று என்பது ஸீஸர் சொல்கின்ற காரணங்களால் புலப்படும்.

போல், அவன் விளையாட்டொன்றையும் விரும்புகின்றானல்லன். சங்கீதத்திற் கவன் செவிகொடுப்பதில்லை.(7). அவன் சிரிப்பதுமில்லை ; சிரித்தாலும் - ஒன்றினைக்கண்டு சிரிக்கவும் ஆயிற்றே என்று தன் உணர்வினை இகழ்ந்து தன்னையே பரிகசித்துநகுவது போல் இளிவரவே சிரிப்பான் அவன் (8). தம்மின் உயர்ந்தோரைக் காணுங்கால், இவனனைய மனிதர் தம் இதயம் ஒருபோதும் அமைதியுடன் இருந்திடாது ; ஆகையாற்றான் அவர் அதிகமும் ஆபத்திற்கிடமானவர் (9). இதனால், அஞ்சுதற்குரியதெதுவென்பதை நானுனக்குச் சொல்வதாகக் கொள்ளவேண்டுமேயன்றி, யானதற் கஞ்சுவதாக எண்ணாதே - ஏனெனில், எப்பொழுதும் நான் ஸீஸர்தான் (10). இந்தக் காது செவிடாதலின் வலப்புறம் வந்து, அவனைப்பற்றி நீ என்ன நினைக்கின்றாயென்பதை உண்மையாகச் சொல்.

[ஸீஸரும் அவன் பரிவாரத்தினரும் போகின்றனர், காஸ்க்கா பின் நிற்கின்றான்]

காஸ்க்கா:—என் அங்கியைப் பற்றி நீ இழுத்தாய் ; என்னுடன் பேசவேண்டுமா ?

ப்ரூடஸ்:—ஆம், காஸ்க்கா, ஸீஸர் இத்துணைத் துயருடன் தோன்ற இன்றைக்கு என்ன நேர்ந்ததென்றெமக்குச் சொல்.

காஸ்க்கா:—மற்று, நீயுமவனுடன் இருந்தாய், அல்லையோ ?

ப்ரூடஸ்:—எனின், நேர்ந்த தென்னென நான் காஸ்க்காவைக் கேட்கவேண்டாவே.

காஸ்க்கா:—வேறென் ! மகுடமொன் றவனுக் களிக்க நீட்டினார். நீட்டவே தன் புறங்கையா லவனதை இப்படி அகற்றித் தவிர்த்தனன் ; அதன்பிறகு சனங்கள் விழுந்துவிழுந்து கத்தினர். (11)

ப்ரூடஸ்:—இரண்டாமுறை எழுந்த ஆரவாரம் எதன் பொருட்டு ?

காஸ்க்கா:—ஏன் ! அதுவும் அதற்குத்தான்.

ப்ரூடஸ்:—மூன்றுமுறை பெருமுழக்கஞ் செய்தனரே. கடைசியாகக் கத்தியதெதற்கு ?

காஸ்க்கா:—ஏன் ! அதுவும் அதற்குத்தான்.

ப்ரூடஸ்:—மூன்று முறைகளா அவனுக்கு மகுடத்தை நீட்டினர் ?

காஸ்க்கா:—ஆம், ஆம் ! ஒருதரத்திற் கொருதரம் அவனும் மெல்லவே மெல்லவே அதனை மும்முறை தவிர்த்து விட்டனன் (12) ஒவ்வொரு தரம் தவிர்க்கும்போதும் என்னயலிருந்த உத்தமர்கள் உரக்கக் கத்தினார்கள். (13)

காஸ்ஸியஸ்:—மகுடத்தை அளிக்கநீட்டியது யார் ?

காஸ்க்கா:—ஏன் ! ஆண்டனி. (14)

ப்ரூடஸ்:—அது எவ்விதம் நிகழ்ந்ததென்பதைக் காஸ்க்கா, எமக்குச் சொல்வாயோ ?

காஸ்க்கா:—அது எவ்விதம் நிகழ்ந்ததென்பதைச் சொல்வதனினும் என்னைச் சுருக்கிட்டுத் தூக்கலாமே (15) வெறுங் கோமாளிக்கூத்தே அது - நான் அதனைக்கவனிக்கவில்லை. மார்க்ஆண்டனி அவனுக்கோர் மகுடத்தைக் கொடுப்பதைப் பார்த்தேன்-... மகுடமும் அன்று அது, இந்தச் சுடிகைகளில் ஒன்றுதான் (16) - அதனை, முன்னுனக்கு நான் சொன்னபடி, ஒருதரம் தவிர்த்தனன்: ஆயினும், தவிர்ப்பதெல்லாந் தவிர்த்தாலும், ஏற்றுக்கொள்ள

(7) 'வெனிஸ் வர்த்தகன்' என்றவேறோர் நாடகத்தில் ஷேக்ஸ்பியர் இக்கருத்தை வற்புறுத்தியிருக்கின்றார். "தன்னிடத்தில் இசைநயம் இல்லாமலும், இனிய ஸ்வரங்களின் லயத்தினால் அசைக்கப்படாமலுமிருக்கின்றவொரு மனிதன், துரோகங்களுக்கும் தந்திரச் சூழ்ச்சிகளுக்கும் கொள்ளைகளுக்குமே தகுதியுடையவன்; அவன் ஆன்ம இயக்கம் இரவிலும் மந்தமாம்; அவன் ஆசைகள் நரகிலும் இருண்டதாய் இருக்கும். அன்னவன் எவனையும் நம்பவேண்டா"—என்று அங்குக் கூறப்பட்டிருக்கின்றது.

(8) வாய்விட்டுச் சிரிக்கும் வழக்கமுடையார்பால் ஒருபோதும் வஞ்சனை இராதென்றும் அவர்களை நம்பலாம் என்றும் ஆங்கிலப்புலவர் கார்லைல் கூறுகின்றார். ஸீஸர் இங்கு அதன் எதிர்நிலையைத் தெரிவிக்கின்றான்.

(9) வறண்ட உடல், பசித்தபார்வை, ஆழ்ந்தசிந்தனை விளையாட்டில் விருப்பமில்லாமை, இசைநயத்திற்குச் செவிகொடாமை, சிரிப்பின்மை, ஆகிய இக்குணங்கள் தனித்தனி தீதொன்றும் உணர்த்தாவிடினும் அவைகளின் தொகுதி அழுக்காறுடைய மனத்தின் அடையாளம் ஆகும், என்பது கருத்து.

(10) ஸீஸர் என்ற பேரே அஞ்சாமைக்கு அறிகுறி என்பது கருத்து. நான் எந்த நாளும் எந்நிலையிலும் ஸீஸரே ஆதலின், யான் யாருக்கும் அஞ்சுவதென்பதில்லை. பயப்படக்கூடியவர் பயப்படவேண்டியது இந்தக்காஸ்ஸியஸ் போன்றவர்களுக்கே என்பதைமட்டும் இங்குச்சொல்கின்றேன்—என்கின்றான்.

(11) லூபர்கல் திருவிழா நடத்துகையில், சனங்களின் சார்பாகச் சர்வாதிகாரியாயிருந்த ஸீஸரைத் தமக்குச் சக்ரவர்த்தியே ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று, சனங்கள் அவனுக்கு முடிசூட்டப் புக்கனர் என்றும், ஸீஸர் அப்பதவியை மிகவும் அவாவினனாயினும், முடி சூட்டிக்கொள்ள மறுத்தானென்றும் காஸ்க்கா தெரிவிக்கின்றான். இந் நிகழ்ச்சி உண்மையே என்பது பின்னர் வேறோரிடத்தில் ஆண்டனி சொல்வதாலுந் தெரியவரும். ஆயினும் காஸ்க்கா சொல்கின்றபடி ஸீஸர், ஆசையிருந்தும் சனங்களின் நன்மதிப்புத் தன்பால் நிலைத்திருக்க வேண்டுமே என்று அம்மகுடத்தை ஏற்காதவன்போல் நடித்தானோ, அல்லது உண்மையிலேயே சனங்களது குடியரசு முறையை அரசாட்சியாக மாற்ற மறுத்தானோ வென்பது தெரிய இடமில்லை. ஸீஸரின்பால் விரோதமுடன் பேசுகின்ற காஸ்க்காவின்மொழிகளை முற்றிலும் நம்பிவிட இயலாது.

(12) தவிர்க்க மனமில்லாமலே மெல்ல மெல்லத் தவிர்த்தனன் என்பது பொருள். முதல்தரம் மெல்லத் தவிர்த்தான், மறுமுறை அதனினும் மெல்லத் தவிர்த்தான், மூன்றாமுறை முன்னினும் மெல்லத் தவிர்த்தான்.

(13) உத்தமர்கள், என்பது வஞ்சப்புகழ்ச்சி. ஸீஸர் எத்தனையோ வஞ்சனைகளை நெடிது நினைத்து இப்பொழுது இம்முடியினை மறுக்கின்றானென்பது தெரியாத அம் மடச்சனங்கள், தன்னலமறுப்பினால் இது செய்கின்றான் என மதித்து அவனைப் பாராட்டினார்களே, என்பது காஸ்க்காவின் இகழ்ச்சி.

(14) ஏன், ஏன், என இங்கும் முன்னரும் வந்திருப்பவை, "கேட்பானேன்' என்னுங் குறிப்புடையன.

(15) என்னைக் கொன்றாலும் அது நிகழ்ந்தவிதத்தை என்னாற் சொல்ல இயலாது; ஏனெனில் அதுவொன்றையும் நான் கவனிக்கவில்லை—என்பது பொருள். எனினும் இது நிசமன்று. தான் ஒன்றும் கவனிக்காதவன் போல் காஸ்க்கா பாசாங்கே செய்கின்றான். பின் இவன் சொல்வதிலிருந்து, நிகழ்ந்தவைகளையெல்லாம் மிகவும் நுட்பமாய்க் கவனித்திருந்தானென்பது புலப்படும்.

(16) சுடிகை என்பது சிற்றரசர் தரிக்கும் சிறு முடியினை இங்குக் குறிக்கின்றது.

வே இச்சித்தானென்று என்புத்திக்குப்படுகின்றது. பிறகு, அவனதனை அவனுக்கு மறுபடியும் நீட்டினான் ; அப்பொழுதும் அவனதனை மறுபடி தவிர்த்தான். எனினும், அதனைவிட்டுத் தன் விரல்களை எடுக்க அவனுக்குச் சிறிதும் மனம் வரவில்லை என்றே என்புத்திக்குப் படுகின்றது. பிறகு அவன் மூன்றாமுறை கொடுத்தான் ; இவன் மூன்றாமுறையும் தவிர்த்தான். இப்படி இவன் மறுத்தபோது, அந்தக் கும்பல்கள் ஊளையிட்டும் கைதட்டியும் தம் வியர்வையொழுகும் 'குல்லாய்'களை மேலே எறிந்தும், ஸீஸர் மகுடத்தை மறுத்தானென்று அவர் விளம்பிய வாய்க்காற்றின் நாற்றத்தால் ஸீஸர் திணறிப்போய் மூர்ச்சையாகி விழுந்துவிட்டான். நானோ, உதடுகளைத் திறந்து அந்தக் கெட்ட காற்றை ஏற்றுக்கொள்ள அஞ்சிச் சிரிக்கத் துணிந்திலேன். (17)

காஸ்ஸியஸ்:— இரு இரு ! என்ன ! ஸீஸர் மூர்ச்சையாயினனோ ?

காஸ்க்கா:—ஆவணமருங்கில் கீழ் விழுந்தான்; வாயில் நுரைபொங்கப் பேச்சில்லை.

ப்ரூடஸ்:—இருக்கலாம், - விழுநோய் அவனுக்கு உண்டு (18).

காஸ்ஸியஸ்:—இல்லை, ஸீஸருக்கு அஃதில்லை; மற்று, நீயும் நானும் உத்தம காஸ்க்காவும், நமக்குத்தான் விழுநோய் உளது (19).

காஸ்க்கா—அதனால் எப்பொருள் குறிக்கின்றாய் என்பது எனக்குத் தெரியவில்லை ; ஸீஸர் விழுந்தான் என்பது மாத்திரம் நிச்சயம். (20) கூத்துக்கொட்டகையில், நடிகர்களைச் செய்வதுபோல், இந்தக் கந்தைகூளச் சனங்கள் ஸீஸரையும், தாம் உவந்தபோது கைதட்டிக் கொண்டாடியும் சினந்தபோது சீறியும் நடத்தியிலராகில், பிறகு நானோர் மெய்யாய மனிதனல்லன் (21).

ப்ரூடஸ்:—தன்னினைவு வந்தபின் என்ன சொன்னானவன் ?

காஸ்க்கா:—விழுவதன்முன், தான் மகுடத்தை மறுத்ததற்கு அந்தப் பொதுசன மந்தை மகிழ்ந்தது கண்டு அவன் கஞ்சுகத்தைத் திறந்து தன் தொண்டையை அறுத்துவிடும்படி அவர்களுக்குக் காட்டினான் (22). நான்மாத்திரம் தொழிலொன்று ஏதேனும் உடையவனாயிருந்தும் அவன் சொன்னபடி செய்யா தொழிந்தேனாயின், அந்தத் துஷ்டர்களுடன் நரகத்திற்குச் செல்வேனாக (23)- அப்படியே விழுந்தான். மறுபடி தன்னினைவு வந்ததும், செய்கையால் சொல்லால் தான் ஏதேனுந் தவறியிருந்தால் அது தன் அசக்தியே என்று கனவான்கள் நினைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். நான் நின்றஇடத்தி லிருந்த மூன்றுநான்கு குட்டிகள் (24) "ஐயோ பாவம், எவ்வளவு நல்லவன்" என்று கத்தி, தங்கள் முழு இதயத்தோடும் அவனை மன்னித்துவிட்டனர். இது ஒரு பொருளிலதே ! அவர்களது தாய்மார்களை ஸீஸர் குத்திக்கொன்றிருந்தாலும் இதனிற் குறைந்து செய்திரார் (25).

ப்ரூடஸ்:—அதற்கப்புறம், இப்படிப் பருவாலுடையனாய்ப் பெயர்ந்து போந்தனன் ?

காஸ்க்கா:—உம்.

காஸ்ஸியஸ்:—ஸிஸிரோ ஏதேனும் பேசினானோ?

(17) காஸ்க்கா, சனங்களைப்பற்றிக் குறிக்கும் இச்சொற்கள் நினைவில் கொள்ளத்தக்கன. முதற்களத்தில் வந்த, ப்ளேவியஸ் மரூல்லஸ் என்பவர், பொதுமக்கள் இனத்தைச் சேர்ந்தவர் ; அவர்களுடை உரிமையைக் காத்து அவர் நன்மைகளை நாடவேண்டியதற் கென்றமைந்த பொதுஜனப் பிரதிநிதிகளும் ஆவார். எனினும் பொதுஜனங்களை அவர் எவ்வளவு இழிவாக மதித்து நடத்தினார் என்பதை முன்னர்க் கண்டோம். காஸ்க்கா, மேல் வகுப்பைச் சேர்ந்தவன். பொதுஜனங்களின் உரிமைகளுக்குக் குறைவுவராதபடி காப்பதற்கு ஸீஸரைக்கொல்ல உடன்பட்டேன், என்று சதிக்கொலையாளர்களுடன் சேர்ந்து சொல்லிக்கொள்ளப்போகின்றவன். ஆயினும், இப்பொதுஜனங்களை இவன் இவ்வளவு இழிவுபடுத்தி இங்குப் பேசுகின்றான்.

(18) காக்காய்வலி, என்று கூறப்படும் நோய் இங்கு 'விழுநோய்' எனக்குறிக்கப்பட்டிருக்கின்றது. ஒருவனைக் கீழே விழச்செய்கின்ற நோய் என்பது பொருள். (ஆவண மருங்கு - கடைத்தெரு)

(19) காஸ்ஸியஸ் இங்கிதமாகப் பேசுகிறான். நாமெல்லாம் இனி ஸீஸரின் கொடுமையால் விழப்போகின்றோம் என்பது கருத்தாகலாம். 'உத்தம காஸ்க்கா' என்று அடைமொழிகொடுத்தது கருதத்தக்கது. தன்னுடைய கட்சிக்கு ஆள் சேர்த்துவருகின்ற காஸ்ஸியஸ், காஸ்க்காவின் வார்த்தைகளிலிருந்து அவனும் இணங்கக்கூடும் என்றெண்ணி அவனோடு அதிக உறவுசெய்துகொள்ள முயல்கின்றான்.

(20) "விழுகின்றவர் நாம்" என்பதற்குக் காஸ்க்கா என்னபதில் சொல்கின்றான் என்று சோதிக்கநினைத்தான் காஸ்ஸியஸ். காஸ்க்காவோ அதன்பொருளை அறிந்து கொள்ளாதவன்போல் பாவித்துவிட்டான்.

(21) சனங்கள், நடிகர்களைத் தம்இஷ்டம்போல் ஒருபோது கொண்டாடியும் மறுபோது வெறுத்தும் ஆட்டிவைப்பதுபோல் ஸீஸரையும் நடத்தினர். இது பொய்யாயின் நானோர் மனிதனில்லை—என்பது பொருள்.

(22) கஞ்சுகம் - அங்கி, சட்டை. சனங்களுடைய ஆதரவையேதான் வேண்டிநிற்கின்றானென்றும் தன் உயிரையும் அவர்வசம் ஒப்புவித்துவிட்டான் என்பதையும் காட்டுவதற்கு ஸீஸர் இப்படிச் செய்தான், என்று காஸ்க்கா சொல்வது பெரும்பாலும் பொய்யே ஆதல்வேண்டும்.

(23) இம் மொழிகளுக்கு இருவிதம் பொருள் கொள்ளலாம்: — (1)நான் ஒரு தொழிலும் முயலாத சோம்பேறி ஆதலாற்றான், ஸீஸர் 'என் கழுத்தைவெட்டுங்கள்' என்று காட்டியவுடன் அப்படியே வெட்டா திருந்துவிட்டேன்; மற்று நான், ஆள்வினையுடையவனாயிருந்தும் இதுசெய்யாமல் சும்மாவிருந்தேனாயின், நான் செய்யவேண்டியசெவ்வியிலொன்றைச் செய்யாதுவிட்ட பாவத்திற்காக நரகத்திற்கே போவதற்குரியவன். அல்லது (2)நான் உரோம் நகரப் பெரியமனிதர்களில் ஒருவனாயிருந்ததால், ஸீஸர் ஒப்புக்குச் சொன்ன அந்த வார்த்தைகளை மெய்யென்று கொண்டு அவன் தொண்டையை உடனே அறுக்க இயலாமல் போயிற்று. அப்படிக்கின்றி நான், தச்சன் கொல்லன்போன்ற ஒரு தொழிலாளியா யிருப்பேனாயின், "ஸீஸர் தன் கழுத்தை அறு என்று சொன்னான், நான் அறுத்துவிட்டேன்" என்றுகாரியத்தைத் தீர்த்திருப்பேன்.

(24) குட்டிகள் - சிறுபெண்கள்.

(25) ஸீஸர் சனங்களுக்கு அடங்கியிருப்பவன்போல் நடிக்கும் வஞ்சனையில் மதிமயங்கிக்கிடந்த இப்பெண்கள் அவன் இவர்களுக்கு எத்துணைப் பெரிய தீங்கு இழைத்திருப்பினும் அதனைப்பொருட்படுத்தாது பொறுத்திருப்பர். இவர்தாயர்களைக் கொன்றுவிட்டுப் பிறகு ஸீஸர், "என்னுடைய அசக்தியால் செய்துவிட்டேன், மன்னியுங்கள்" என்றாலும் இவர் முழுமனதோடும் மன்னித்திருப்பார்களே—என்பது பொருள்.

காஸ்க்கா:—உம் - கிரீக் பாஷை பேசினன்.

காஸ்ஸியஸ்:—பேசியதன் கருத்தென்ன ?

காஸ்க்கா:—அதனைச் சொல்வேனாயின், பிறகு நான் உன் முகத்தில் ஒருபோதும் விழிக்காமற் போகக் கடவேனாக (26) அவன் சொன்னவைகளைத் தெரிந்துகொண்டவர், ஒருவரைப்பார்த் தொருவர் சிறுநகைசெய்து தம் தலைகளை அசைத்தனர். என் வரையிலோ, அது எனக்குக் கிரீக் பாஷையாகவேயிருந்தது. இன்னும் சில செய்திகளும் நானுங்களுக்குச் சொல்லலாம். ஸீஸரின் உருவச் சிலைகளிலிருந்து உத்தரீயங்களை இழுத்தெறிந்ததற்காக மரூல்லஸும் ப்ளேவியஸும் மௌனஞ் செய்யப்பெற்றனர் (27) விடை கொள்கின்றேன். இன்னும் கோமாளிக்கூத்துச் சில நிகழ்ந்தது - எனக்குத்தான் நினைவுவரவில்லை.

காஸ்ஸியஸ்:—காஸ்க்கா, இன்றிரவு என்னுடன் போனகம் அருந்த வருவாயோ ?

காஸ்க்கா:—வருதற்கில்லை, வேறிடத்திற்கு வாக்களித்திருக்கின்றேன்.

காஸ்ஸியஸ்:—நாளைப்பகலேனும் என்னுடன் உண்ணுதற் கிசைவாயோ ?

காஸ்க்கா:—உம். உயிருடன் நானும், மாறாமலுன் மனமும், உண்பதற்குரியதாய் உன் விருந்தும் இருக்குமாயின் (28)

காஸ்ஸியஸ்:—நன்று; உன்னை நான் எதிர்பார்த்திருப்பேன். (29)

காஸ்க்கா:—இரு. போய்வருகின்றேன்; இருவரும் விடை கொடுங்கள்

[காஸ்க்கா போகின்றான்]

ப்ரூடஸ்:—இவனென்ன இப்படி மழுங்கிப்போய் விட்டானே! பள்ளிக்குப்போன நாட்களில் சுருசுருப்பா யிருந்தான்.

காஸ்ஸியஸ்:—தீரமுடைய பெரிய கருமம் சாதிப்பதாயின் இப்பொழுதும் அவன் அப்படியே. எனினும் இந்த மந்தவேடத்தை அவன் பூண்கின்றான். இந்த முரட்டுத்தனந்தான் அவன் சித்திரப் பேச்சிற்கு ஊறுகாய் போலாம். (30) அவன் சொற்களை நல்ல பசியுடன் சீரணம் செய்துகொள்ளத் தக்க வயிற்றை மற்றவர்களுக்கு கொடுக்கின்றது இது (31).

ப்ரூடஸ்:—ஆம், அப்படித் தான் - தற்போது யான் நின்னைவிட் டகலல்வேண்டும். நாளைக்கு, என்னுடன் பேசுதற்கு நீ விரும்புவாயாயின் நான் உன் வீட்டிற்கு வருகின்றேன்; அல்லது, என் வீட்டிற்கு நீ வருவாயாயின், வருக, யான் உனக்குக் காத்திருப்பேன். (32)

காஸ்ஸியஸ்:—நானே வருகின்றேன். அதுவரையில், உலகத்தைப்பற்றிச் சிந்தனைசெய்.

[ப்ரூடஸ் போகின்றான்]

ஆம், ப்ரூடஸ், நீ பெருந்தகையாளன்; எனினும், மேன்மைவாய்ந்த உன் தாதுவை அதன் தன்மை திரியவேலைசெய்துவிட இயலுமென்பதையுங் காண்கின்றேன் (33) ஆகையால் மாண்புடைய மனங்கள் எப்பொழுதும் தம் இனத்துடனேயே சேர்ந்திருப்பதே தக்கது (34) நயப்புரைக்கு ஆளாகிக் கெடுதலில்லா உறுதியுடையார் யாரே உளர் (35). ஸீஸர் என்னைப் பெரிதுங் கடிகின்றான்; மற்றுப் புரூடஸையோ நேசிக்கின்றனன். நானிப்பொழுது

(26) ஸிஸிரோ பேசிய தொன்றும் தனக்கு விளங்கியதில்லை என்பது பொருள். உரோமர்களுக்கு, கிரீக் அயல் பாஷை; ஸிஸிரோ பேசியதன் பொருள் விளங்கவில்லையாதலின் அவன் வேறோர் பாஷையில் பேசினன் என்றே கொள்ளல்வேண்டும், என்கின்றான் காஸ்க்கா.

(27) மௌனஞ்செய்தல்—என்பது ஆங்கில வழக்கில் இடக்கரடக்கலாய்க் கொல்லுதல் என்னும் பொருளில் வரும். சரித்திரத்தின்படி, மாரூல்லஸிற்கும் ப்ளேவியஸிற்கும் ஸீஸர் உயிர்த்தண்டனை விதித்தது உண்மையேயானாலும், இங்கிதனைக் காஸ்க்கா உரைப்பது மிகவும் சந்தேகத்திற் கிடமாயிருக்கின்றது. முதற்களத்தின் நிகழ்ச்சியைத்தொடர்ந்தே இந்தக்களமும் நடக்கின்றதாதலின், இதற்குள் ஸீஸர் அவர்களைப் பிடித்துத் தண்டித்திருக்க நேரமில்லையே.

(28) இருக்குமாயின் வருகின்றேன், என்று முடித்துக் கொள்க. காஸ்க்கா விளையாட்டாகப் பேசுகின்றான்.

(29) காஸ்க்காவைக் காஸ்ஸியஸ் விருந்திற்குப் பரிந்தழைப்பதன் நோக்கம் வெளிப்படை—தன் சூழ்வினைக்கு உதவியாய் அவனையுஞ் சேர்த்துக்கொள்ள.

(30) விருந்திற் கழைப்பானொருவனை நோக்கி, "உன் உணவு உண்ணத்தகுந்ததா யிருக்குமாயின் வருவேன்" என்பது தகவிலா முரட்டுத்தனம். காஸ்க்காவின் புத்தி மழுங்கிவிட்டதால் இவ்வண்ணம் பேசுகின்றான் என்று எண்ணிய ப்ரூடஸை மறுத்து, "இந்த வாய்த் துடுக்கெல்லாம் வேண்டுமென்று வரவழைத்துக்கொள்வதேயன்றி இயற்கையில் அவன் மந்தபுத்தி யுடையவன் அல்லன்" என்று காஸ்ஸியஸ் காட்டுகின்றான்.

(31) ஊறுகாய் எப்படிப் பசியைத்தூண்டிச் சீரணத்திற்கு உதவுகின்றதோ, அப்படியேதான் காஸ்க்காவின் 'காரமான' முரட்டுவார்த்தைகள், கேட்பவர்களுடைய ஆர்வத்தைத்தூண்டி, பிறகு அவன் சொல்பவைகளைச் செவ்விதின் ஏற்றுக்கொள்ளும்படி செய்கின்றன—என்பது பொருள். காஸ்க்காவை விருந்திற் கழைத்ததையொட்டி அம் முரட்டுச்சொற்கள் எழுந்தனவாதலின், காஸ்ஸியஸின் உருவகமும், உணவு ஊறுகாய் பசி சீரணம் முதலியவைகளைச் சார்ந்தே, அவனுக்குந் தெரியாமல் வருகின்ற. இது இயற்கையே—காஸ்க்காவைத் தம் கட்சியில் சேர்த்துக்கொள்ளப் புரூடஸ் மறுக்காதபடி காஸ்ஸியஸ் அவன் புத்தியையும் தீரத்தையும் ஊக்கத்தையும் சிறப்பித்துப் பேசுகின்றான்.

(32) காஸ்ஸியஸ் துவக்கிவிட்ட கருத்துக்கள் முதிர வேண்டுமென்று ப்ரூடஸ் விரும்புவதை இது காட்டுகின்றது.

(33) தாது-உலோகம். நீ இயற்கையில் தங்கமாயிருந்தாலும், செயற்கையால் உன்மேன்மையைக் குறைத்து இழிந்தவனாகச் செய்துவிடலாமென்பது, நீ என்வார்த்தைகளுக்கு இணங்கிவருவதிலிருந்து தெரியவருகின்றது.

(34) மனம், என்பது இங்கு ஆகுபெயராய் மனது உடையவர்களைக் குறிக்கின்றது.

(35) ப்ரூடஸ் இயற்கையிலே உத்தம குணங்களுடையனாயிருந்தும் காஸ்ஸியஸின் சேர்க்கையினாற்றான் கெட்டானோ, அல்லது அவனிடத்துக் கரந்திருந்த தீமைதான் காஸ்ஸியஸால் வெளிப்பட்டதோ என்பதைப் பின்னர் நாம் விரிவாக ஆராய இருக்கின்றோம். மேலோர் கீழோர் சேர்க்கையால் கெடுவர் என்னும் இக்கருத்துக் காஸ்ஸியஸின் கொள்கையே யொழிய ஷேக்ஸ்பியர் கொள்கையென்று எண்ணலாகாது.

ப்ரூடஸாக இருந்து அவன் காஸ்ஸியஸாக இருப்பானெனின் அவன் என்னை இப்படித் தூண்டமுடியாது (36) உரோமாபுரி அவன் பெயரை எத்துணைப் பெரிது மதித்திருக்கின்ற தென்பதைக் காட்ட வல்லனவாய், ஸீஸரின் பேராசையையும் மறைவாகக் குறிப்பிட்டு, ஊராரில் வேறு வேறு பலர் எழுதியதுபோல் பல கையெழுத்துக்களில் எழுதி இன்றிரவு அவன் பலகணிகளுக்குள் போடுவேன் (37) இதற்கப்புறம், ஸீஸர் திண்ணமாய் உட்கார்ந்திருக்கக்கூடுமோ பார்ப்போம்! நாங்களவனை அசைத்துவிடுவோம், இல்லையேல் கெட்ட காலம் வருதற்கிருக்கின்றது. (38)

(36) ஸீஸரினுடைய நட்பிற்குப் பாத்திரமாயிருந்தும் ப்ரூடஸ் அவனுடன் பகைக்க இணங்குகின்றானே என்று காஸ்ஸியஸ் ஒருவாறு வியக்கின்றான்.

(37) ஸீஸரைப் பகைத்தெழுந்தால் ஊராரும் உதவியாயிருப்பர் என்னுந்துணிவைப் ப்ரூட்டஸிற்கு ஊட்டும் பொருட்டுக் காஸ்ஸியஸ் செய்கின்ற சூழ்ச்சி யிது.

(38) இதனால் ஸீஸரின் நிலை தளரவேண்டும்; இல்லையேல் எம்முடைய நாசம் நிச்சயம்—என்பது பொருள்.

பெண்பாலார்

[Arthur Schopenhaur on WOMEN]

[ஆர்தர் ஷோபன்ஹூவர் என்பவர் சிறந்த ஜெர்மனிய தத்துவவாராய்ச்சி யறிஞர்களில் ஒருவராவர். அவர் 19-வது நூற்றாண்டில் இருந்த பெரியார். கலையொடு தத்துவநூற்களையெல்லாம் ஆய்ந்தவர். அன்றியும், இந்திய தத்துவநூல்களை ஆர்வமொடு ஆய்ந்து தெரிந்தவர். அவர் இயற்றிய தத்துவநூல்களில் எங்கும் நம் சங்கரர் விளக்கிய அத்துவைத மதம் போற்றப்பெற்றிருப்பதைக் காணலாம். மனிதன் இறுதியில் துறவியாய் முடிவதே பேறுடைய வாழ்க்கை என்பது இவ்வித்தகர் கொள்கை. இவர் வரைந்திருப்பவைகளில் மிகவும் புகழ்பெற்ற 'பெண் பாலார்' என்னுங் கட்டுரை இங்கு நேரே மொழிபெயர்த்துவரையப்பெறுகின்றது. இதனைப் படிக்கும்போது, "ஆண்பாலாரே பெண்பாலாரோ டடைவம்மா" என்னுமக் கம்பரது அடி சிலர் நினைவிற்கு வரலாம்.]

ஷில்லர் என்னும் வித்தகர் பெண்பாலாரைக் கொண்டாடும்பொருட்டு எழுதிய நூல் செவ்விய சிந்தனையின்பயனாய் நிகழ்ந்தவொன்றாகும். 'உலோபி தன்னையே களவாடிக்கொள்கின்றான்' என்பது போன்ற மாறுபாடுடைய பொருளோடு முரண்விளைந் தழியும் அலங்கார வாக்கியங்களாலும், சொன்னடையின் நயத்தினாலும் அந்நூலை வாசகர்கள் விரும்புகின்றார்கள். ஆனால் பெண்ணினத்தின் உண்மைப் பெருமையை விளக்கவந்த நூல் என்று கொள்ளத்தக்கதெது வெனில்—ஜாயி 'Jouy' என்பவர் பெண்ணின் பெருமையைப் பற்றிக் கூறிய சில வாக்கியங்களைக் கருதுமளவில் ஷில்லரின் நூல் அடுத்தபடியாகத் தான் கருதுதற் குரியதென நான் மதிக்கின்றேன். மாதரார் இல்லையாயின் நமது வாழ்க்கையின் துவக்கம் திக்கற்றதாய் விளைந்துவிடும்; வாழ்வின் இடையோ துய்ப்பதற்குரிய நலமொன்று மற்றதாய்ப் போய்விடும்; முடிவேனில் ஆறுதல் அற்றதாய்விடும். இவையே ஜாய் என்பருடைய அருமை வாசகங்கள். இதை ஆங்கிலக்கவி பைரன்என்பவர் இன்னும் இனியதான உணர்வினொடு அவரது பாவொன்றில் கூறுகின்றார். அதாவது:—

"முதன்முதல் மனித உயிர் மடவார் மார்பினிலே முளைக்கவேண்டும்; உனது முதற் குதலைமொழியை நீ கற்பிக்கப்பெறுவதும் அவர் திருவாயால்; உனது முதற் கண்ணீரைத் துடைப்பவரும் அவரேயாவர். நீ இறுதியில்விடுகின்ற பெருமூச்சும் அவராருகிற் றான்."

இந்தப் புலவர் இருவர் உரைகள் இவை இரண்டும் பெண்பாலார் நிலையைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு நேரிய வழிகாட்டியாகும்.

மனதினாலோ அல்லது மெய்யினாலோ உழைப்பதற்குரிய தன்மையர் மாதரார் அல்லரென்பதை அறிய நீ வேண்டுமெனில் அவரது அமைப்பின் தன்மையை நோக்குதல் அவசியமாகும். அவர் தம் வாழ்க்கையின் கடமையை யியற்றிமுடிப்பது அவர் செய்கின்ற காரியங்களாலன்று. குழந்தையைப் பெற்றெடுக்கும் துன்பத்தாலும், பெற்றெடுத்த அம்மதலையை வளர்க்கின்ற வருத்தத்தாலும், இடையிலே படுகின்ற கவலையினாலும், பொறுமையுடனிருந்து புருஷனை எந்நிலையிலும் மகிழ்வித்தும், அவன் சொற்படி அடங்கிநடந்தும் வாழ்கின்ற செம்மையாலும் மாதரார் தம் கடமையை இயற்றியவர் ஆகின்றார்.

பெரியதோர் துன்பமும் இன்பமும் பெண்பாலார்க்குரியவை அல்ல. மனவலியும் மெய்வலியும் தெரியக்காட்டி விவகரிப்பதும் அவர்தம் தன்மையன்று. மிக்க களிப்பும் பெருஞ்சலிப்பும் ஆடவரைச் சார்வதுபோல் பெண்ணினத்தைச் சார்வதில்லை. அவரது வாழ்க்கையின் செலவு நயமுடனும் சழலலற்ற அமைதியுடனும் இருக்கவேண்டும். பாலகர்க்குத் தாதியும் போதிக்கும் உவாத்தியும் ஆவதற்கே மாதரார் தகுதியுடையார். ஏனெனில் அவர் என்றும் ஓர் குழந்தையின் பான்மையே யுடையவர். அவரது செயலிலெல்லாம் விளையாட்டுப் புத்தியும் குறுகிய நோக்கமுமே நாம் காண்கின்றோம். சுருங்கச்சொல்லின் அவர் தம் வாழ்நாள் முழுமையும் வயதுசென்ற குழந்தைகளாகவே யிருக்கின்றனர். சிறு மகவிற்கும் முதிர்ந்தவொரு மனிதனுக்கும் இடையாய ஒரு நிலையேதான் அவரது. குழந்தை யொன்றைச் சிறுமியொருத்தி வைத்துக்கொண்டு சலிக்காமல் நாட் கணக்கில் விளையாடுவாள். அக்குழவியுடன் தானும் ஆடுவாள், பாடுவாள். இதனெதிர், மனவுறுதி மிகவுடைய ஆடவனொருவனை ஒரு குழந்தையுடன் நெடுங்காலம் விட்டுவைத்தால் அவன் எத்துணை விரைவில் பொறுமையை இழப்பான் என்று யோசித்துப்பாருங்கள்.

நாடக வழக்கில் சொல்லப்படும் 'நாடகப்பகட்டு' (Theatrical Effect) என்பதையே இயற்கைத் தெய்வம் மாதர்களுக்கு முடிவாகக்கொடுத்துளது. சில வருடகாலம்வரை எழிற்செல்வத்தை உலோபமின்றிப் பெண்பாலார் அளிக்கப்பெறுகின்றனர். அக்காலத்தில் பெண்டிர் தாம் பெற்ற எழில்கொண்டு ஒரு ஆடவன் மனோபாவத்தைக் கவர்ந்துவிடுகின்றார். கவரப்பெற்ற அவன், வாழ்நாள் முழுதும் அவளுக்கு உற்ற துணையும்காப்புமாய் அமையும்படி தன்னை அவளொடு இணைத்துக்கொள்கின்றான். இந்நிலையில் மனிதன் புத்தியோ விவகரிப்பதில்லை. புத்தியின் விவகாரம் இருக்குமெனில் ஒருநாளும் அவன் ஒருத்திக்கும் தன்னை ஆட்படுத்திக்கொள்ளமாட்டான். இதுபற்றித்தான் எல்லா ஜீவராசிகளுக்கும் இயற்கைத்தேவி அதனதன் தற்காப்பிற்கு வேண்டியகருவிகளை அளித்திருப்பதுபோல் பெண்களுக்கும் அழகு என்னும் கருவியை அளித்துள்ளாள். கருதிய காரியத்திற்குரியபடி ஓர் காலஅளவையும் அவ்வழகிற்கு வரையறுக்கப் பெற்றிருக்கின்றது. மற்ற ஜீவராசிகளினிடம் போலவே பெண்களிடத்திலும், இயற்கை தனது கொடையைச் சிக்கனத்தோடுதான் அளிக்கின்றாள். எறும்பை எடுத்துக்கொள்வோம். பெண் எறும்பானது சூலுற்றதும் அது தன்சிறகை இழந்துவிடுகின்றது. சூலெய்தியபின் அன்னதற்கு இறகு வேண்டியிருப்பதில்லை. சிறகிருக்குமெனில் அது இனத்தைப்பெருக்கும் காரியத்திற்குத் தீமையுமாய் முடியலாம். எனவே தான் அளித்தலொன்றை அக்காலம் அகற்றிவிடுகின்றாள். ஒன்றிரண்டு குழவிகளைப் பெற்றபின்பு பெண்களும் தமது அழகை இழந்துவிடுகின்றனர். இவ்விழவும் முன் கூறிய காரணம்பற்றியே யிருக்கவேண்டும்.

தங்களுக்குரியஇல்லறக் காரியங்களாகட்டும், மனைக்குரிய மற்ற எக்காரியமாகட்டும் அவைகளைப் பெண்கள் முக்கியமான கருமங்களாக மதிப்பதில்லை. காதல் விளைப்பதும், வென்று மகிழ்வதும், விளையாட்டயர்வதும் அனையவைகளே அவர் ஊக்கமொடு ஏற்கும் கருமங்களாகின்றன.

பெருமையால் உயர்ந்ததும் நிறைவிற்சிறந்ததுமானவொன்று முதிர்ச்சியுறக் காலதாமதமாகும். மனிதன் மனமுதிர்ச்சியும் புத்தியின் முழு வளர்ச்சியும் அவனது இருபத்தெட்டாவது ஆண்டினிற்குமுன் பெறுவதில்லை. பதினெட்டாம்பிராயத்தில் பெண்களோமுற்றிவிடுகின்றனர். அவர் பெறுகின்ற மனமுதிர்ச்சி பார்க்குமிடத்து — ஏதோ ஒருவாறுதான் - அஃகிய எல்லையுள் அடங்கிவிடுகின்றது. அதனாற்றான் பெண்கள் வாழ்நாள்முழுதும் குழந்தைகளாயிருந்து தீர்கின்றனர் என்றோம். தங்களுக் கருகாமையிலுள்ளவற்றிற்கப்பால் அவர் நாட்டம்செல்வதில்லை. நிகழ்காலச் செய்திகளே அவர்கள்கருத்தைப்பற்றுகின்றன. வெளித்தோற்றத்தை உண்மையென மயங்கும் தன்மையவர் அவர். முதன்மையும்முக்கியமுமான விஷயங்களைக் காட்டிலும் அற்பவிஷயங்களையே அவர் மனம் ஏற்கின்றது. வளர்ச்சிமிகுந்த மனத்தையுடையவன் ஆடவனாதலால் மிருகங்களைப்போல் அவன்மனம் நிகழ்காலத்தில் நிலைப்பதில்லை. தன்னைச் சுற்றிலுமுள்ளவைகளை அவனும் பார்க்கின்றான்; எனினும் புத்தியை முன்னும் பின்னும் நனிசெலுத்திக் காரியகாரணங்களை ஆய்கின்றான். இந்தவொரு ஆண்தன்மைதான் முன்னும் பின்னும் பார்க்கும் சிந்தனைத்திறமை (Prudence) என்பதற்கும், அச்சம்கவலை யாதிய மனவேதனைக்கும் ஆதாரமாகின்றது. இவ்வாண்தன்மையில் நன்மையேபோல் (Advantage) தீமையும் (Disadvantage) உளது. இத்தன்மை பெண்களிடத்திலும் உளதெனினும், அவரது புத்தி போதியவளவு வளர்வுறாதிருப்பதால், அத்தன்மையால் விளையும் மிகமிகச் சிறிய அல்லலே அவர்களைச் சார்கின்றது. தன்னைச் சுற்றிலுமுள்ளவற்றைப் பெண்பாலார் தமக்குரிய உள்ளுணர்வினால் (Intuitive understanding) தெரிந்துகொள்கின்றனர். சிற்றெல்லைக்குட்பட்ட அவர் மனமோ தம்மைச் சுற்றியுள்ளவைகளுக்கப்பால் நெடிது செல்வதில்லை. இனி நிகழ வருபவைகளும் முன் நிகழ்ந்தவைகளும் தற்கால நிகழ்வில் இல்லாமையால், அவை ஆண்மனத்தைச் சார்ந்து இயக்கிவைப்பதுபோல் பெண்கள்பாற் சென்று கிளர்வதில்லை. நிகழ்விலல்லால் வேறொன்றிலும் பாய்தலில்லா அவர்மனம் பொருட்செலவுடையவீண் வேடிக்கைகளிலும் ஆடம்பரங்களிலும் புக்குழல்கின்றது. சிற்சில சமயங்களில் பித்தின் (Madness) எல்லையையும் நெருங்கிவிடலாம். ஆடவன் கடமை பொருள் சேமித்தல் என்பதும், சேமித்த அப்பொருளைச் செலவழிப்பது தம் கருமமென்பதும் பெண்கள் மனத்தில் நிலைத்துள எண்ணமாகும். இயலுமாயின் அவன் ஆயுள்காலத்திலேயும், இயலாதெனின் அவனுக்குப் பின்னரேனும் பொருளைச் செலவு செய்வதே அவர் விழையும் தொழில். அவன் ஈட்டும் பொருளைக் குடும்பச்செலவிற்கு மாதரார் கைகளில் கொடுக்கின்ற வழக்கத்தால் அவர்கள் கொண்டிருக்கும் அந்தஎண்ணம் வலிவும் உறுகின்றது. (தொடரும்)

வெளிவந்து விட்டது!

சென்ற நான்கு வருடகாலமாய் எதிர்பார்க்கப்பட்ட புதுமையான நாவல்!!

வெளிவந்து விட்டது!!!

தென் இந்திய நாவல் உலகத்து முடிசூடாச் சக்கரவர்த்தியாகிய நிகரற்ற நாவலாசிரியர்

வடுவூர், கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய

துரைக்கண்ணம்மாள் அல்லது **திரிசங்கு சாஸ்திரியார்.**

என்னும் புதுமையான நாவல் வெளிவந்துவிட்டது. இவ்வொப்புயர்வற்ற நாவலை வெறும் வார்த்தைகளால் புகழ்ந்து எழுத முடியாதென்பது நிச்சயம். பிரமிக்கும்படியான அநேக சித்திரப்படங்கள் அடங்கியது—450 பக்கங்கள் கொண்டது. (தபால் செலவு அணா 7) விலை ரூபா **2 4 0.**

V. S. T. சாமி அண்டு கம்பெனி, வேப்பேரி, மதராஸ்.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்—29. தருக்கம்

[53-வது பக்கத் தொடர்ச்சி]

(vi) பூதபரிணமம்

ஜடவடிவமான ஐம்பூதங்கள் சித்துப்பொருளின் சம்பந்தமாகப் பரிணமிப்பதே விருத்தியெனப்படும். தனிமுதலான பரம்பொருளினிடத்து ஒடுங்கிய அண்டசராசரங்கள் மீண்டும் வெளியாவதும், மற்றுப் பிரளயகாலத்தில் ஒடுங்குவதும் இறைவன் திருவிளையாடலென்பர். இதை ஒருவாறு ஓர்தலன்றி, முற்றும் உணரத்தக்க பேரறிவு நமக்கில்லை. ஆதலால் நமது சமயகுரவர்கள் திருவாக்கே நமக்குரிய சுருதியாய்க் கொள்ளற்பாலதாம்.

பெருங்கடன் மூடிப் பிரளயங்
கொண்டு பிரமனும்போ
யிருங்கடன் மூடி யிறக்கு
மிறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங்
கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை
நல்வீணை வாசிக்குமே.

தனித் திருவிருத்தம் 7.

என்பதால், இறைவனிடத்துப் பிறக்கும் நாதத்தினின்று உதிக்கும் பொருள்களைச் சித்தென்றும் ஜடமென்றும் நாம் வேறுபடக் கூறுகின்றோமெனினும், ஞானிகளின் நோக்கில் ஒவ்வொரு ஜடபதார்த்தமும் சித்தின் தன்மை பெற்றே காணப்படும். மேல்நாட்டு அறிவியல் நூலாராய்ச்சிகளும் அம்முடிவிற்கேதூண்டுகின்றன. திருநாவுக்கரசரும் கூறுகின்றார்:—

முன்னே யுரைத்தானு மவனே
யொக்குமிம் மூவுலகுக்
கன்னையு மத்தனு மாவா
யழல்வணா நீ யலையோ ?
உன்னை நினைந்தே கழியுமென்
னுவி கழிந்ததற்பின்
என்னை மறக்கப் பெறுவெம்பி
ரானுன்னை வேண்டியதே.

விண்ணகத் தான்மிக்க வேதத்
தான்விரி நீருடுத்த
மண்ணகத் தான்திரு மாலகத்
தான்மரு வற்கினிய
பண்ணகத் தான்பத்தர் சித்தத்
தான்பழ நாயடியேன்
கண்ணகத் தான்மனத்தான் சென்னி
யானெங்க ளைக்கண்டனே.

தனித் திருவிருத்தம் - 316.

எண்ணுதற்கரிய முழுமுதற் சித்தினின்று உதித்த ஜடம் மீண்டு அப் பரம்பொருளில் ஒடுங்கிவிடும்பொருட்டுப் பரிணமிப்பது இயற்கையாகும். எங்ஙனமெனில் இரும்பு காந்தத்தை அவாவித் தானும் [illegible] வது போலாம். இதற்கு முதற்படி [illegible] பஞ்சபூதங்கள் [illegible] ஜீவர்களின் உடம்பாகப் பரிண[illegible]கும்.

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாயு மாயவற்றின் மீதடுத்துத்—துய்ய
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தா
லவைமுதற் புற்கல மாம்.

பூதங்கள் தத்தம் தன்மைநீங்கி மண் உடம்பாயும், நீர் வாயாயும், தீ கண்ணாயும், காற்று மூக்காயும், ஆகாசம் செவியாயும் நின்று உடம்பும் ஆகும். பொறிகள் தோறும் வினியோகப்பட்ட புலன், சுவைமுதல் ஐந்துவகைப்படும். இவ்வைந்தும் பொறி யைந்தினுமேறி, மண்ணால் உடம்பு ஊறாயும், நீரால் வாய் சுவையாயும், தீயாற் கண் ஒளியாயும், காற்றால் மூக்குநாற்றமாயும் வானாற் செவி ஓசையாயும் வந்து உடம்பாம். அன்றியும் மண்ணின்பகுதி, நரம்பு, இறைச்சி, என்பு, மயிர், தோல் என ஐந்து. நீரின் பகுதி, நீர் மூளை, சுக்கிலம், நிணம், உதிரம் என ஐந்து.

''பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை
தெசிகின்ற தீக்குணமோ ரைந்து-மொசிகின்ற
போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை''

என்பது தீயின்குணமும் காற்றின்குணமும் உணர்த்துகின்றது. ஆகாயத்தின் குணமாவது பின் வருமாறு:—வெகுளி, மதம், மானம், ஆங்காரம், உலோபம் என இவை. இப் பூதகுண மிருபத்தைந்தும் கொண்டு உடம்பாம். இவற்றைப்பின்னர்விவரிப்பாம்.

இவ்வாறு ஆக்கப்பட்ட உடம்பிலே மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்கள் உற்பவிக்கும். மனம் என்பது ஆங்கிலேய மனோசாஸ்திரத்தில் குறிக்கப்படும் (Conation) ராஜஸ தன்மைபெற்ற இயக்கமுடைய தத்துவம். மனம், புத்தி, சித்தம் மூன்றையும் ஒருங்கேசேர்த்து மனம் என்பர் ஆங்கில மனோசாஸ்திரிகள். எனவே மனதுடன் சம்பந்தமான புத்திக்கே தர்க்கசாஸ்திரம் பயன்படும் கலையாகும். புத்தியாய் மனம் சுத்தமடையவேண்டும். சுத்தமனமே நான்காம் புருடார்த்தமானவீட்டையளிப்பதாம்.

18895

தானேயும் இவ்வுலகம் ஒருமுதலு மாகாத்
தன்மையினாற் படைத்தளிக்குந் தலைமையது வான
கோனாகை வொருமுதலிங் குண்டெனவும் யூகங்
கூட்டியதும், சகமுடிவிற் குலவுறுமெய்ஞ்ஞான
வானாக அம்முதலே நிற்குநிலை நம்மால்
மதிப்பரிதாம் எனமோனம் வைத்ததுமுன் மனமே
ஆனாலும் மனஞ்சடமென் றழுங்காதே யுண்மை
அறிவித்த விடங்குருவாம் அருளிலதொன்றிலையே

தாயுமானவர்.

எனவே, மனம் நமக்குச் சற்குருவாய் நல்வழி காட்ட வேண்டியிருப்பதால், அக்குருவின் நிவாசம் பரிசுத்தமாவதற்கேதர்க்கக்கலை எத்தொழிலும்விடாது செய்யுமென்பர். அத்தொழிலில் முறைமுறையே குழவிப் [illegible]த்திலிருந்து எவ்வாறு இயற்கையிலேயே துவக்[illegible] தென்றும் அதில் எவ்வெப் பிழைகள் வரக்கூ[illegible]பதும், ஆங்காங்கு எவ்வித சீர்திருத்

தங்கள் செய்ய வேண்டும் என்பதும் இக்கலையில் முக்கியமாய் அறியவேண்டிய பாகங்களாம்.

(vii) காண்பவன் காணப்படுவேன் இவற்றின் சம்பந்தம்

காண்பவன்-காணப்படுவன் என்பவற்றை "திருக்கு - திரிச்யம்" என வடநூலார் கூறுவர். காணப்படுவன யாவும், காண்பவன் புலன்களின் பயிற்சிக்குத் தக்கவாறு பேதப்படுமென்பது மனோ சாஸ்திரிகளின் சித்தாந்தமாம். ஆறறிவு பெற்ற எல்லா மக்களுக்கும் இவ்வுலகம் ஒரேமாதிரியாய்க் காணப்படவில்லை.

நீராகி நீளகலந் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பி னுச்சி யாகிப்
பேராகி பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கண் மூன்றினையு மெய்தா னாகி
யாரேனுந் தன்னடைந்தார் தம்மை யெல்லா
மாட்கொள்ள வல்லவெம் மீச னார்தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிக ணின்ற வாறே.

நின்ற திருத்தாண்டகம் - 9.

என்னும் அனுபவம் பல நூற்றாண்டுகளில், யோகியாய் வாழும் ஒருவருக்கு வரக்கூடியதன்றி உலகத்திலுள்ள மக்களுக்குச் சாதாரண உணர்ச்சியன்று. எனவே, சாதாரண உணர்ச்சியே, தர்க்கக்கலை விருத்திக்கு இடங்கொடுக்கும். தர்க்கம்கடந்த சச்சிதானந்த பிரத்தியட்ச அநுபவசாலிகளுக்குத் தர்க்கம் எதற்கு? பிரத்தியட்சத்தில் மருள்கொடுக்கும் உத்தேசமாய்ப் பெயர்பெறும் பொருள்கள் இவையிவை யெனப் பகுத்தறியவும், அவற்றைப் பயன்படுத்தவும், இலக்கணங்களறிந்து பரிசோதிக்கவும், வேண்டப்படுகின்ற கருவிகள், பிரமாணம் அநுமானம் உவமானம் சப்தம் அருத்தாபத்தி அநுபவத்தி ஆதியவைகளைப் பயன்படுத்தும் விதங்களைக் காட்டவுமே தர்க்கக்கலை முக்கியமாய் உதவுமென்னலாம். காண்பவன் வேறென்றும் காணப்படுபவன் வேறென்றும் துவிதநிலையே உலகநிலையாதலால் அவ்வழியே சென்று சுத்தமடைந்த பின்னரே, அத்துவித ஞானம் ஜனிக்க இடமுண்டாகும். அவ்வத்துவிதஞானத்தைத் திருநாவுக்கரசர் சிலேடையில் பாடுவது காண்க:—

ஒருவ னாகிநின் றானிவ் வுலகெலாம்
இருவ ராகிநின் றார்கட் கறிகிலான்
அருவ ராவரை யார்த்தவ னார்கழல்
பரவு வாரவர் பாவம் பறையுமே.

சித்தத்தொகை - 11.

[குறிப்பு:—"இருவராகி நின்றார்" என்பது பிரமன் மால் என்பவர்களைக் குறிப்பது ஒரு பொருளாகும்-துவித இலக்கணமாய்த் தான் வேறாயும், காணப்படுவன வேறாயு முள்ள அஞ்ஞான வாதனைபெற்ற ஜீவர் என்பது மற்றொரு பொருளாகும்]

ஆகையால் சிறுவருக்கு நியமங்கடவாது அறிவு உதிக்கும் வண்ணமும், புத்தியும் மனமும் செவ்வனே திருந்தும் வண்ணமும் செய்ய ஆரம்பிக்கும் காலையிலேயே, அவருடைய உலகத்தோற்றமும் திருந்தி நூதன ஒளிகளால் விளக்கப்படும். "கட்டாய் நின்று நீங்கள் காலத்தைக் கழிக்கவேண்டா" மென்று திருநாவுக்கரசு சிறு வயதின் தன்மையை அடியிற்கண்ட பாசுரத்தில் விளக்குவது காண்க:—

பொய்விரா மேனி தன்னைப்
பொருளெனக் காலம் போக்கி
மெய்விரா மனத்த னல்லேன்
வேதியர் வேத ராவர்
வைவரா லலைக்கப் பட்ட
வாக்கைகொண் டயர்த்துப் போனேன்
செய்வரா லுகளுஞ் செம்மைத்
திருச்சோற்றுத் துறைய னாரே.

திருச்சோற்றுத்துறை - திருநேரிசை 1.

"பொய்" என்பது யாது "மெய்" என்பது யாது என்னும் ஆராய்ச்சியே, காண்பவன் காணப்படும் பொருள்களிற் செய்யும் தொழிலின் முக்கிய தொழிலாம். இதுவே தர்க்கத்தின் முக்கிய நோக்கமுமாம். இதன் அடிப்படைகளை நமதுநாட்டு நியாயவாதிகள் நூல்களின் முறையிலும் மேல்நாட்டுத் தர்க்கமுறையிலும் ஆராய்வோம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்

குழந்தைகளுக்கு :
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

REGD TRADE MARK
யுனைடெட் சோல் ஏஜண்டு: கன் ஸன், மதராஸ்.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட்

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—2. சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்.

[56-வது பக்கத் தொடர்ச்சி]

போதுமையும் புதுமையாய்ப் பொலிந்து தோன்றுமே.

வல்லரக்கனுய் யாவும் வாய்மடுத்துத் தின்றுழன்ற வவ் விராதன்றன் பொல்லாவுடம்பைப் புதைத்துப் பின், மன்மதன் சாங்களோடு, தன் கசடுடைய ஐம்புலன்களிடு பூசலையும் முயன்றுமுற்றிய பெருந்தவத்தினுல் பின்னிடப்பொருதவென்று, செல்லற்கரியதேனும்சென்றபின் மீளவேண்டாமுத்தியெனுமொரு பெருந்தனிப்பேற்றை உன்னிநின்ற முனிவரர் பெருமான் சரபங்கன் வைகியசூழலை இராகவன் மற்றிருவரோடும் நண்ணி, புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம் என்று அறைகின்ற மறைகளுக்கு மப்பாலாயவன் தான் என்பதைக் காட்டுவான்போல் இவ்வள்ளல் அம்முனிவனுக்குத் துறக்கத்தினு மப்பாலாய பதவியை யளித்துச்சென்ற வரலாற்றைக் கூறுகின்ற இச்செய்தி கம்பர்நூலினுள் பொதுவறப் பொலிகின்ற தென்பதற்கில்லையேனும், வான்மீகர் இதனை வகுத்துள்ள வகையினோடு ஒப்புநோக்குங்கால், தனக்குரிய சிறப்பைபெய்தி யுயர்கின்ற அருமை தெரிய வருகின்றது. பொதுமையைப் புதுமையாக்குதற்குக் கருத்தின துயர்வல்லால் வேண்டப்படுவது வேறில்லை. அவரவர் கருத்தளவே யாகுமாங் கம்பர்கவி.

மதனனைங் கணைகளைச் செகுத்துநின்றவம் மாதவன் சரபங்கன்திறத்தினில் நம் கம்பபெருமான் முதனூலினின்று விலகிய பரிசினை நலமுறக் காண்டலும், கருத்துக்கள் உயர்ந்த மேன்மை தெரிதரத் தோன்றலாகும். ஆதலின் முதலில், வான்மீகரது வழியைப் பின்பற்றிச் சிறிது நோக்குவோம்:—

விராதனை வீழ்த்தியபின் மேல்நடந்த மூவரும் சரபங்க மகரிஷியின் ஆசிரமத்திற் கருகு சேருங்கால் அங்கு இந்திரன், தான் அமரர்தலைவன் என்பதற்குரிய எல்லா வைபவங்களுடனும், தேவபரிவாரங்கள் புடைசூழவும் வந்து அம்முனிவரரோடு அகமுறநயந்து சில பேசிக்கொண்டிருப்பதை இராமன் தூரத்திலேயே கண்டு, அதனை இலக்குவனுக்குக் காட்டி, அவனைச் சீதையோடும் பின் நிற்கவிட்டு முன் நடந்தான்.

இராமன் வருவதைக்கண்ட வாசவன், "இராமனிங்கு வந்துகொண்டிருக்கின்றார்; அவரிப்பொழுது என்னைக் காண்பது தகுதியன்று; முன்னர்த் தமது காரியத்தை முடிக்கட்டும்; பிறகு என்னை அவர் பார்க்கலாம். அவர் சீக்கிரத்தில் ஜெயித்துக் காரியத்தை முடித்துக்கொண்டவுடன் நானே அவரைப் பார்ப்பேன். வேறொருவராலும் செய்யமுடியாத பெருங்காரியம் அவரால் ஆகவேண்டியிருக்கின்றது. அதை முடித்துவிட்ட பிறகுதான் அவர் என்னைக் காணலாம்" என்று முனிவரிடம் இரகசியமாகக் கூறி விடைபெற்று விரைந்தகன்றனன். அவன்போயபின் இராமன் மற்றிருவரையும் உடன்கொண்டுமுனிவரர் முன்னரெய்தி வணங்கி எதிருபசரிக்கப்பெற்று அமர்ந்தபிறகு, இந்திரன் வந்ததைப்பற்றிவினவ முனிவரும், "அப்பா, இராமா, என்னை இந்திரன் பிரம்மலோகத்திற் கழைத்தேக வந்தான்; மற்றவர்களால் ஒருபொழுதும் ஜெயிக்கமுடியாததை நான் என்னுடைய தவத்தால் வென்றிருக்கின்றேன். ஓ புருஷவீரா, தாங்கள் எனக்கு வெகு சமீபத்தில் வந்திருப்பதாக நான் தெரிந்துகொண்டபடியால் பிரியமான அதிதியாக வந்த தங்களைக்காணுமல் நான் பிரம்மலோகம் போகக்கூடாதென்று நின்றுவிட்டேன். இனி மகாத்துமாவாயுந் தர்மசீலராயுமுள்ள தங்களைக் கண்டபிறகு நான் தேவர்களால் சேவிக்கப்படும் திரிதிவலோகம் போகப் போகின்றேன்; எனக் குரியனவாகிய இவைகளைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று இயம்புதலும், எல்லாச் சாத்திரங்களையும் நன்றாகக் கற்றறிந்த இராகவர் அவரைப்பார்த்து, "ஐயா, மகரிஷியே நானே இவ்வுலகங்களை எனக்குத் தேடிக்கொள்கின்றேன். அப்படி முடியாவிட்டால் தங்கள் சொற்படி அங்கீகாரம் செய்துகொள்கின்றேன்; இப்பொழுது இக்காட்டில் வந்திருக்கும் எனக்கு நான் வசிக்கவேண்டிய இடத்தைக் குறிப்பிக்கும்படி தங்களை வேண்டிக்கொள்கின்றேன்" என்றனன். இவ்வாறு கேட்ட இராமனுக்குச் சரபங்கர், சுதீக்ஷ்ணர் என்னும் அருந்தவர் தம் இருப்பிடம் போகும் நெறி குறிப்பித்து, "ஆனால், புருஷசிரேஷ்டரே, ஒரு முகூர்த்தகாலம் என்னைப் பாரும்; பாம்பு தனது பழைய தோலைக் கழற்றிவிடுவதுபோல் நான் என்தேகத்தை நீத்துவிடப்போகின்றேன்" என்று வேண்டி, அக்கினியை நன்றாக மூட்டிச் சாஸ்திரப்பிரகாரம் கொழுந்துவிட்டெரியும் அவ்வக்கினியின் மத்தியில் அம்மகாகாந்திபொருந்திய சரபங்கமுனிவர் பிரவேசித்தார். அவ்வக்கினி அவருடைய உரோமம், மாமிசம் இரத்தம் எலும்பு என்னும் இவைகளை யெல்லாம் தகித்தது. அதை இராமரும் லக்ஷ்மணரும் சீதையும் பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். உடனே சரபங்கர் அவ்வக்கினி மத்தியில் இருந்து அக்கினிக்கொப்பான ஒரு சிறுபிள்ளையாய் எழுந்து அகிதாக்கினிகள், இருடிகள், மகாத்துமாக்கள், தேவர்கள் முதலியோர் தங்கள் தங்கள் புண்ணியங்களால் அடைந்திருக்கும் உலோகங்களையெல்லாங் கடந்துசென்று பிரம்மலோகத்தைப் போயடைந்தார். அநேக புண்ணியங்களைச் செய்த அவ்வந்தண சிரேஷ்டர் அவ்வுலகத்தில் பிரமதேவர் தமது பரிவாரங்களுடன் இருப்பதைக் கண்டார். பிரமதேவரும் அவரைக்கண்டு சந்தோஷமடைந்து அவருக்கு நல்வரவு கூறினர்"

வால்மீகர் நூலின்படி சரபங்கர், இந்திரனளித்த பிரம்மலோகத்திற் கெய்த இசைந்தவாறு இவ்வாறு. இதன்படி, தவம் செய்வதும் அத்தவத்திற்கேற்ற பயனைப் பெறுவதுந் தக்கதே. தன் பொறுப்பிலேயே இந்திரன் அதனை ஈந்திட வந்தனன். வந்திருந்த அவ்வாசவன், இராமனை அங்குக் காணலாகாதென்று எற்றுக்கு விரைந்து விலகினனென்பது ஐயமின்றித் தெரிதற்கில்லை. ஒருகால், தன்பொருட்டு இராமன் காடும் மலையுங்கடந்து படும் இடுக்கண் கண்டாற்றாது, இளகிய மனத்தினல், "இராம, எமக்குக் கொடுந்துயரியற்றுமவ் வரக்கர் வாழினும் வாழ்க. இத்துணை இடரிற் குன்னை ஆளாக்குவது எமக்குத் தகவன்று. இக்கணமே, எமதன்னையொடும் நீயுன் பரமபதம் மீண்டு இனிதிருந்தருள்க" எனவேண்டும்படி தூண்டப்பெறின் என்செய வென்றஞ்சியோ, அத் தளர்ச்சிக்கிடந்தரலாகாதென ஒருகால் அமரர்கோன் அவண் விட்டகன்று போயினன். இனிக் கம்பர்நூலில், இராமனைக் காணவொண்ணுதென இந்திரன் தீர்தலின்றி நின்றிருந்து போற்றினன். சரபங்கமுனிவனும், நான்முகன் ஏவலால் இந்திரன் பரிந்தழைத்த அப்பிரம்மலோகத்திற்கு எய்த இசைந்திலன். இத்தவவரன்பால் வந்துரைத்த தூதிற்கவ் விந்திரன் பெற்ற கைம்மாறு இகழ்ச்சியே. "வைத்து நீ இதனை விளையாடுக" என்று வேதவியாதன்மைந்தன் சுகனுக்கு ஓர் பூனைக்குட்டி கொடுப்பதையே நிகர்த்தது சரபங்கனுக்குப் பிரம்மலோகம் கொடுக்க வந்த இக்கொள்கை எனக் கம்பர் பெருமான் இனிதின் காட்டுகின்றார்.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:— அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறுத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E N. தணிகாசல முதலியார், B .A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

களவியற் காரிகை: —(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறுத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

இந்திய அரசாங்கமுறை:—ஜனவரி மாதம் 15 தேதியன்று இந்தியா மந்திரியான ஸர். ஸாமுவல் ஹோர் என்பார், லண்டன் இந்திய நிலயத்தில்கூடிய ஐரோப்பியப் பத்திரிகாசிரியர் கூட்டமொன்றில் "இந்தியாவின் நிலைமையும் இந்திய வரசாங்கத்தின் முறையும்" என்பதுபற்றிப்பேசினர். அதன்சுருக்கம்வருமாறு:—

இந்தியாவிற்கு அரசியல் அதிகாரங்களை அதிகம் அளிக்கக்கூடிய திட்டமொன்றைச் செய்யும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்காலையில் இந்தியாவில் அமைதியின்மைக் குரிய நிலைமை ஏற்படலாயிற்று. இந் நிலைமையை மாற்றிவைப்பதற்காக இந்திய அரசாங்கத்தார் கையாண்டமுறை பயனையே அளித்துளது. நாட்டிலும் அமைதி பரவிவருகின்றது. அவசியமிருக்கும்வரையில்தான் அவசரச்சட்டங்கள் அமுலிலிருக்கும். அதற்குமேல் ஒரு நிமிடங்கூட இச்சட்டங்கள் அமுலில் இரா. இந்திய அரசாங்கத்தைப் பயமுறுத்திவிட நினைப்பது மதியீனம். அரசாங்கத்தை நடைபெறமுடியாது செய்துவிடல் என்னும் முயற்சி இந்தியாவில் இருக்கும்வரை அவசரச்சட்டங்களும் அமுலில் இருக்கத்தான்வேண்டும். கலகநிலையை உண்டுபண்ணும் கிளர்ச்சியை இந்தியர் விடுத்துவிட்டு, அமைதியான முறையில் பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்க முற்படுவாரெனில், இந்தியருக்குத் திருப்தியளிக்கக்கூடிய முறையில் அரசியல் திருத்தம்செய்ய அரசாங்கத்தாரும் முற்படுவர். ராஜப்பிரதிநிதியும் மற்றுமுள நிர்வாக அதிகாரிகளும் திறைமயுடன் இப்பொழுதுஏற்பட்ட நிலையை நிர்வகித்ததற்கு அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

அடக்குமுறை கையாளப்படுவதும் சீர் திருத்தக் கமிட்டியார் இந்தியாவிற்குச்செல்வதும் விபரீதமாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் விபரீதம் ஒன்றுமில்லை. இந்தியாவில் அமைதியில்லையெனில் திருத்த வேலையைக் கமிட்டியார் எப்படிச் செய்யமுடியும்.

இப்பொழுது அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டுள இருவிதமான வேலைகளை நிதான புத்தியுள்ள இந்தியர்கள் பக்ஷபாதமில்லாது சீர்தூக்கிப் பார்ப்பார்களாயின் இந்திய அரசாங்கத்தின்மீது குறைகூற முன்வரார். அடக்குமுறை சீர்திருத்தத்திற்கு இடையூறாயிராது. இருமுறைகளும் ஒரு கொள்கையை அநுசரித்தேயுளது. இந்தியர் எய்த விரும்பியதும், ஆனால் இன்னும் அனேக ஆண்டுவரைக் கைவரப்பெறுதென்று நினைத்ததுமான ஒரு முற்போக்கான அரசியல் திட்டத்தை இந்தியர்சீக்கிரத்தில் பெறப்போகின்றனர். இந்திய நண்பர்கள் இதை உணர்ந்து அரசாங்கத்திற்குக் கூட்டுறவு தரவேண்டும்.

வட்டமேஜை மஹாநாட்டுச் சீர்திருத்தக் கமிட்டியைப்பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகின்றேன். அரசியல்திருத்தம் செய்ய ஏற்படுத்தப்பெற்ற மூன்று கமிட்டிகளிலும் சரியானபடி பிரதிநிதிகள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர். பிரிட்டிஷார் பக்கமும் இந்தியாவின் பக்கமும் சரியானபடி பிரதிநிதித்துவமுடையதாய் இக்கமிட்டிகள் சேர்க்கப்பட்டுள. இனி வேண்டுவது அமைதியான[illegible] ஒழியக்கிளர்ச்சியன்று.

அமெரிக்கப் பாதிரிமார்களில் 106 பேர், காந்தியடிகளை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்றும், இந்தியா விஷயமாய்ச் சமரசமான முடிவைச் செய்ய வேண்டும் என்றும் முதன் மந்திரி ராம்சே மாக்டொனால்டிற்கு மனுவொன்றை அனுப்பியிருக்கின்றனர் என்று அயல் நாட்டுச்செய்தி கூறுகின்றது.

***

இங்கிலாந்தில் ஆல்பர்ட் அர்னால்டு என்னும் பெயருடைய ஒரு வயோதிகன் இருக்கின்றான். அவன் 1828-ம் ஆண்டு பிறந்தவனும். அவனுக்கு இப்பொழுது வயது 104. அவன் பார்வைக்கு 75 வயதுடையவனைப் போலிருக்கின்றானும். அவன் இப்பொழுது பிரிட்டிஷ் சினிமாக் கம்பனியில் வேடம் போட்டு ஆடி வருகின்றானும். அவன் இந்நாள்வரை உடல் உரத்தோடு இருப்பதற்குக் காரணம் இந்தியாவில் அநுஷ்டிக்கப்படும் யோகமுறையென்று பிரிட்டிஷ் பத்திரிகை நிருபரிடம் அவன் கூறினனும்.

***

பதினாயிரம் அடிதூரத்திலுள்ள வஸ்துக்களை இருட்டிலும் நன்றுபார்க்கக் கூடிய ஸர்ச்லைட் ஒன்று மேஜர் J. C. சாவேஜ் என்னும் ஆங்கில நிபுணரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாம். இந்த லைட் 30 கோடி காண்டில் பவர் உள்ளதாம்.

***

சென்னையில் உள்ள நேஷனல் இன்ஷியூரென்ஸ் கம்பனியார் வெளியிட்டுள்ள புது வருடக் காலண்டர் வரப் பெற்றோம். இதில் விடுமுறை நாட்கள் சிகப்பு எழுத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. பார்வைக்கு அழகாக விருக்கின்றது.

***

தஞ்சாவூரைச் சேர்ந்த குற்றாலத்திற்குச் சமீபமாயுள்ள ஒரு கிராமத்தில் எலிபிடிக்கும் பொருட்டு ஆதித்திராவிடர்கள் வயலின் வரப்புக்களை வெட்டிக் கொண்டிருந்தார்களாம். அப்பொழுது ஓரிடத்தில் ஓசைகேட்டதாம். ஓசைகேட்ட விடத்தில் வெட்டவே, நடராஜ விக்ரகமும், அம்மன் விக்ரகமும், விநாயகப் பெருமான் விக்ரகமும், நால்வர் உருவச்சிலைகளும் அகப்பட்டனவாம். அவ்விக்ரகங்கள் அவ்வூர்க் கோயிலில் பிரதிஷ்டைசெய்து வைக்கப்படுமென்றும் கும்பாபிஷேகம் நடக்குமென்றும் தஞ்சைச் செய்தி கூறுகின்றது.

***

இங்கிலாந்தில் வாழ்வார் வருஷந்தோறும் ஆள் ஒன்றிற்கு 98 ஆப்பிளும், 67 ஆரஞ்சுப் பழமும், 52 வாழைப் பழமும், 15 எலுமிச்சம் பழமும் சாப்பிடுகின்றார்கள் என்று ஓர் பிரிட்டிஷ்பத்திரிகை கூறுகின்றது.

***

உலகத்தில் யுத்தம் நடவாது செய்வதென்னும் பேச்சினால் பயனென்றும் ஏற்படாதென்றும், அன்னதற்கு அறிஞர் ஈன்ஸ்டன் ஒரு புத்தகத்தை யெழுத வேண்டுமென்றும், காந்திபடிகள் உலகம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்கு அவரது அன்பு [illegible]பதேசத்தைச் செய்யவேண்டுமென்றும் ஷெபர்ட் [illegible]ம் ஒருபாதிரியார் பிரிட்டிஷ் பத்திரிகை நிருப[illegible]றியுள்ளார்.

KALANILAYAM
REG. NO. M, 2324.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

விலை உள்நாடு		விலை வெளிநாடு
,, 9-0-0	அரைலெதர் பயிண்டு	,, 10-8-0
,, 8-8-0	காலிகோ	,, 10-0-0
,, 7-8-0	(பயிண்டு செய்யாதது)	9-0-0

ரயிலில் அனுப்பப் புத்தகமொன்றிற்கு 6 அணா ஆகும் தபாலில் அனுப்பவேண்டுமானல் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

ஏற்படுத்தியது] நாஷனல் [1906

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷ்யூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஐவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)